கவனிக்க.— இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி IV இன் 1976 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 03 ஆந் திகதிய இல. 242, 1976 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 10 ஆந் திகதிய இல. 243, 1976 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 17 ஆந் திகதிய இல. 244, 1976 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 24 ஆந் திகதிய இல. 245 ஆகியவற்றிற்குரிய அறிவித்தல்கள் இவ்வர்த்தமானியோடு சேர்த்து பிரசுரிக்கப்பட்டுள்ளன.


# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 246—1976 දෙසැම්බර් 31 වැනි සිකුරාදා—1976.12.31

246 ம் இலக்கம் — 1976 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV — உள்ளூராட்சி

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்து வைப்பதற்காக தனித் தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 127 | வரவு செலவுக் கூற்றுக்கள் | — |
| பதவிகள் — வெறுமை | — | வரவு செலவுத் திட்டங்கள் | — |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | — | ஆதன விற்பனைகள் | — |
| துணைவிதிகள் | 1 2 | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | — |
| உள்ளூராட்சி அதிகார நிலையத் தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | — | நானாவித அறிவித்தல்கள் | 137 |


கவனிக்க.— இலங்கை உரோமன் கத்தோலிக்க அதி மேற்றிராணியார், மேற்றிராணியார்கள் (திருத்தம்) சட்டமூலமும், பதுளை ஸ்ரீ சத்தர்மானந்த கழகம் கூட்டிணைத்தல் சட்டமூலமும் 1976 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 17 ஆந் தேதிய இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பிகளாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

## உள்ளூராட்சி அறிவித்தல்கள்

### பெல்மதுளைப் பட்டினசபை

பட்டினசபைகள் கட்டளைச் சட்டம்

**1977 ஆம் ஆண்டுக்கான விசேட மலகூட வரி**

(256ம் அத்தியாயமான) பட்டினசபைகள் கட்டளைச் சட்டத்தின் 129 (ஆ) என்னும் பிரிவின் கீழும் அவருக்குக் கையளிக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு உள்ளூராட்சி ஆணையாளரினால் கொடுக்கப்பட்ட அங்கீகாரத்துடனும் துணைவிதிகளினால் விதிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வரையறைகளுக்கும் விலக்களிப்புகளுக்கும் அமைவாக பெல்மதுளைப் பட்டினத்தினுள் அமைந்துள்ளனவும் இதன் கண்ணுள்ள அட்டவணையிற் குறிக்கப்பட்டுள்ளனவுமான அசைவற்ற ஆதனங்கள் அனைத்தினதும் வருடாந்தப் பெறுமதியின் நூற்றுக்கு மூன்று வீதமானதும் முறையே மார்ச்சு 31, யூன் 30, செத்தெம்பர் 30, திசெம்பர் 31 ஆகிய திகதிகளில் நான்கு தவணைகளில் சமதொகைகளாகச் செலுத்தப்படற்பாலதுமான ஒரு விசேட மலகூட வரியை 1977 ஆம் ஆண்டுக்கு பெல்மதுளைப் பட்டினசபை விதித்துள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

டபிள்யூ. ஈ. வீ. எஸ். த அல்விஸ்,
உள்ளூராட்சி ஆணையாளர்.

கொழும்பு,
1976 ம் டிசெம்பர் மீ 10 ந உ.

அட்டவணை

பின்வரும் மதிப்பீட்டிலக்கங்கள் அடங்கியுள்ள பிரதேசம் :—

**2ம் வட்டாரம் : வித்தியாலயப் பிரதேசம்**

குற்றப்பிற்றிய வீதி:—17, 17/1, 19, 19/1, 21, 23, 23/1, 27, 29, 31, 31/1, 33, 35, 35/1, 37, 37/1, 39, 41, 43, 45, 47, 57, 59, 59/1, 61, 63, 63/1, 69, 71, 71/1, 71/2, 73, 75, 77, 77/1, 79, 81, 8, 12, 14, 16, 18, 20, 22, 24, 32, 32/1, 34, 38, 40, 42, 44, 48, 54, 56, 68, 68/1, 78, 78/1, 78/2, 78/3, 78/4,

குற்றப்பிற்றிய குறுக்கு வீதி :—1, 5, 7, 9, 11, 15, 19, 19/1, 19/2, 19/3, 25, 25/1, 25/3, 25/4, 27, 29, 31, 31/1, 31/2.

இரத்தினபுரிவீதி :—73, 73/1, 75, 77, 81, 83, 85, 89, 89A, 91, 95, 97, 101, 103, 105, 107, 111, 113, 115, 115/1, 121, 123, 125, 129 131, 133, 135, 137, 137/1, 139, 141,

108, 110, 112, 114, 116, 118, 120, 132, 134, 133, 148, 148/5, 148/6, 148/7, 162, 164, 166, 168, 170, 172, 174, 194, 194/4, 194/5 194/6, 196, 198, 200, 204, 206, 206/1, 176, 178,

**3ம் வட்டாரம் : கலுகம்முல்ல**

போபிற்றிய வீதி :—4, 6, 8

றக்குவானை வீதி:—2, 4, 6, 8, 10, 14, 16, 18, 22, 26, 40, 50, 52, 58, 60, 62, 62/1, 62/2, 66, 94, 96, 96/1, 100, 102, 102/2, 102/3, 102/4, 102/9, 102/14, 102/15, 108, 110,

இரத்தினபுரி வீதி :—1, 3, 3/1, 7, 11, 11/1, 15, 17, 19, 27, 29, 31, 33, 35, 37, 39, 41, 43, 45, 47, 49, 51, 53, 55, 57, 59, 61, 63, 65, 67, 69, 71, 71/1, 71/3, 71/2,

வலவத்த வீதி :—11, 11/1, 11/8, 10, 16,

**4ம் வட்டாரம் : பசார்**

பலாங்கொடைவீதி:—1, 3, 3A, 5, 5/1, 7, 11, 15, 17, 19, 21, 23, 25, 27, 31, 33, 35, 39, 41, 45, 45/1, 45/2, 45/3, 45/4, 45/5, 47, 55, 57, 59, 61, 67, 67/1, 71, 73, 75, 79, 81, 87, 91, 91/1, 97, 99,

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக ஒவ்வொருமாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொருபகுதி இறுதியிலும் வெளிவரும்முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக்கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்குத் திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1974 ம் ஸ்ரீ நவெம்பர் மீ 22 ந உ.

99/1, 99/3. 99/4, 99/5, 107, 111, 113, 115, 117, 119, 121, 125, 125/1, 125/2, 125/3, 125/10, 129, 131, 133, 135, 135/1, 135/2, 135/3, 135/5, 135/8, 139/9, 135/10, 135/15, 141, 143, 145, 147,

18, 22, 24, 26, 26/1, 26/2, 28, 30, 32, 34, 36, 40, 42, 44, 46, 48, 50,

**4 ம் வட்டாரம்**

குற்றப்பிற்றிய சேக்குலர் வீதி:—1, 11, 17, 21, 23, 25, 31, 31/1, 31/2, 6, 26, 26/1, 32, 40, 42

றக்குவானே வீதி:—5, 11, 15, 17, 23, 31, 27, 33, 35, 43, 45, 47,

இரத்தினபுரி வீதி:—2, 4, 6, 10, 14, 16, 18 20, 22, 26, 30. 34, 34/1, 36, 36/2, 36/3, 36/4, 36/5, 36/6, 36/7, 36/8, 36/9, 36/10, 36/11, 36/12, 36/14, 36/15. 36/16, 36/18. 36/19, 36/20, 36/22, 36/23, 36/24, 36/25, 36/30. 36/31, 36/33, 36/34, 36/35, 36/36, 36/38, 36/40, 36/47, 36/48, 36/50, 36/51, 36/52, 38, 42, 44, 48, 52, 58, 60, 66, 70, 72, 74, 76, 78, 82, 84, 86, 88, 90, 92, 94, 96,

ரூபாறூன வீதி :— 7, 15

**5ம் வட்டாரம்-விகரகாம**

பலாங்கொட வீதி :—70, 76, 76/1, 76/2, 76/3, 78, 80, 82, 84, 88, 88/1, 88/2, 88/4. 88/5, 88/6, 88/7, 88/9, 88/10, 88/11, 88/12, 88/14, 88/15, 88/16. 90, 90/1, 90/2, 90/3, 90/4, 92, 94, 96, 98, 98/1, 98/2, 98/3, 98/4, 98/5, 100, 102,

றக்குவானே வீதி:—59, 61, 63, 67, 71, 75, 77, 83, 87, 95, 95/1, 95/2, 95/3,

ரூபாறூன வீதி :—6, 6/1, 12/5, 12/6, 12/10, 12/14,

**7ம் வட்டாரம்-கெதெதென்ன**

கமறன்கபிற்றியவீதி:—7, 6, 10, 12, 14, 18, 22, 26, 28, 32, 36, 40 42,

கெதெதென்ன—மொறத்தோட்ட வீதி :—3, 5, 7, 9, 11, 15, 21, 23, 25, 29. 31, 33, 35, 37, 39, 41, 43. 53, 61, 65, 73, 73/1, 73/2, 73/3, 83,85, 87, 95, 99, 6, 8, 12. 16, 16/1, 20, 26, 28, 30, 32,36, 42, 44,48, 56, 62, 64, 66, 70, 74, 78, 82, 82/1, 86, 92, 94,94/1, 94/2, 94/4, 94/6, 94/8, 94/9, 94/10, 94/11, 104, 106, 110, 114,

றக்குவானே வீதி :—433, 433/1, 433/2, 433/3, 435, 439, 441 441/1, 441/2, 441/3, 441/7, 443/1, 443/2, 443/3, 451, 453, 455, 457, 459, 461 463, 467, 469, 471, 471/1, 475, 477, 485, 503, 505, 505/1, 507, 509, 511, 513, 513/2, 513/3, 515. 519, 521, 523, 523/1, 527, 531, 539, 541, 543, 545, 547, 549 551, 553, 555, 559, 563, 565, 567, 569, 571, 577, 579, 581, 581/1, 587, 589, 587/1, 591, 607, 438, 440, 442, 444, 446, 448, 450, 452, 454, 456, 460, 462, 464, 466, 468, 480, 482, 486. 486/1, 488, 490, 492, 494, 494/1, 498, 500, 504, 508, 510, 512, 516, 522, 522/1, 524, 530, 532, 534. 536, 542, 542/1, 544, 546, 548, 550, 552, 556, 558, 560, 562, 564, 568, 572, 574, 576, 578, 580, 584, 586, 588, 590, 594, 596, 598, 612, 616, 618, 620,

12-671—31.12.76 ந் திகதிய வர்த்தமானி இல. 246

---

**வீடமைப்பு, நகரச் சீர்திருத்தக் கட்டளைச்சட்டம்**

1976.03.02 இல் நடைபெற்ற கூட்டமொன்றில் தேசிய அரசுப்பேரவையால் நிறைவேற்றப்பட்ட பின்வரும் தீர்மானம் பொதுமக்கள் அறிவதற்காகப் பிரசுரிக்கப்படுகின்றது.

சி. ஈ. எச். அமரசேகர,
செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு,

கொழும்பு, 1976 ம் ஆண்டு நவம்பர் மீ 15 ந் வ.

**தீர்மானம்**

(268 ஆம் அத்தியாயமான) வீடமைப்பு நகரச் சீர்திருத்தக்கட்டளைச் சட்டமானது 1976.03.01 ஆந் திகதியிலிருந்து இதனோடுள்ள அட்டவணையில் வரையறை செய்யப்பட்டுள்ள பிரதேசத்துக்குள் நடைமுறையில் இருத்தல் வேண்டுமென மேற்கூறப்பட்ட கட்டளைச்சட்டத்தின் 3 (ஆ) என்னும் பிரிவின் ஏற்பாடுகளின் கீழப் பேரவை தீர்மானிக்கின்றது.

**அட்டவணை**

மேல் மாகாணம் கொழும்பு மாவட்டத்திலுள்ள அனுத்குரு கோறளை தெற்கின் றைகம்பற்றுவிலுள்ள கலகிற்றியாவ கிராமச்சபைப் பிரதேசத்தில் அமைந்துள்ள கலகிற்றியாவ, கொரகொல்ல, திப்பொடுகொட, மகிலங்கமுவ ஆகிய கிராமங்களைக் கொண்டதும் பின்வருமாறு எல்லை யிடப்பட்டதுமான காணிப்பிரதேசமனைத்தும்.

வடக்கு : கனேமுல்லே–கந்தானை வீதியினதும் கொனுகஹ எல்லை யினதும் மத்திய கோடுகள் ஊடறுக்கும் இடத்திலிருந்து வடக்கே 300 அடி தூரத்திலுள்ள ஓர் இடத்திலிருந்து கிழக்கு நோக்கி சொல்லப்பட்ட வீதியின் மத்திய கோட்டுக்குச் சமாந்தரமாகவும் 300 அடி தூரத்திலும் கலகிற்றியாவ–குடபொல்லத்த வீதியின் மத்திய கோட்டிலிருந்து 300 அடி தூரத்திலுள்ள ஓர் இடம்வரை ; அங்கிருந்து வடக்கு நோக்கி சொல்லப்பட்ட வீதியின் மத்திய கோட்டிற்குச் சமாந்தரமாக சொல்லப்பட்ட வீதியிலுள்ள ½ ஆம் இலக்க மதகின் மத்திக்கு நேராகவுள்ள ஓர் இடம்வரை அங்கிருந்து கிழக்கு நோக்கி சொல்லப்பட்ட மதகின் மத்திய கோட்டின் ஓரமாக சொல்லப்பட்ட வீதியின் மத்திய கோட்டிற்குக் கிழக்கே 300 அடி தூரத்திலுள்ள ஓர் இடம்வரை ; அங்கிருந்து தெற்கு நோக்கி சொல்லப்பட்ட வீதியின் மத்திய கோட்டிற்குச் சமாந்தரமாகவும் 300 அடி தூரத்திலும் கனேமுல்லே–கந்தானே வீதியின் மத்திய கோட்டிலிருந்து 300 அடி தூரத்திலுள்ள ஓர் இடம்வரை ; அங்கிருந்து கிழக்குநோக்கி சொல்லப்பட்ட வீதியின் மத்திய கோட்டிற்குச் சமாந்தரமாகவும் 300 அடி தூரத்திலும் கலகிற்றியாவ–ஜா–எல வீதியின் மத்திய கோட்டிலிருந்து 300 அடி தூரத்திலுள்ள ஓர் இடம்வரை ; அங்கிருந்து வடமேற்கு நோக்கி சொல்லப்பட்ட வீதியின் மத்திய கோட்டிற்குச் சமாந்தரமாகவும் 300 அடி தூரத்திலும் சொல்லப்பட்ட வீதியிலுள்ள 2/5 ம் இலக்க மதகின் மத்திக்கு நேராகவுள்ள ஓர் இடம்வரை ;அங்கிருந்து வடகிழக்கு நோக்கி சொல்லப்பட்ட மதகின் மத்திய கோட்டின் ஓரமாக சொல்லப்பட்ட வீதியின் மத்திய கோட்டிற்கு கிழக்கே 3 அடி தூரத்திலுள்ள ஓர் இடம்வரை ; அங்கிருந்து தென்மேற்கு நோக்கி சொல்லப்பட்ட வீதியின் மத்திய கோட்டிற்குச் சமாந்தரமாகவும் 300 அடி தூரத்திலும் கொரகொல்ல, மகிலங்கமுவ வீதியின் மத்திய கோட்டிலிருந்து 300 அடி தூரத்திலுள்ள ஓர் இடம்வரை ; அங்கிருந்து வடகிழக்கு நோக்கி சொல்லப்பட்ட வீதியின் மத்திய கோட்டிற்குச் சமாந்தரமாகவும் 300 அடி தூரத்திலும் சொல்லப்பட்ட வீதியிலுள்ள 3/1 ஆம் இலக்க மதகின் மத்திக்கு நேராகவுள்ள ஓர் இடம்வரை ; அங்கிருந்து கிழக்கு நோக்கி சொல்லப்பட்ட மதகின் மத்திய கோட்டின் ஓரமாக சொல்லப்பட்ட வீதியின் மத்திய கோட்டிற்குக் கிழக்கே 300 அடி தூரத்திலுள்ள ஓர் இடம்வரை ; அங்கிருந்து தென்மேற்கு நோக்கி சொல்லப்பட்ட வீதியின் மத்திய கோட்டிற்குச் சமாந்தரமாகவும் 300 அடி தூரத்திலும் பெரோரா வீதியின் மத்திய கோட்டிலிருந்து 300 அடி தூரத்திலுள்ள ஓர் இடம்வரை ; அங்கிருந்து கிழக்கு நோக்கி சொல்லப்பட்ட வீதியின் மத்திய கோட்டிற்குச் சமாந்தரமாகவும் 300 அடி தூரத்திலும் கடவத்தை கிருடிவித்த வீதியின் மத்திய கோட்டிலிருந்து 300 அடி தூரத்திலுள்ள ஓர் இடம்வரை ; அங்கிருந்து வடகிழக்கு நோக்கி சொல்லப்பட்ட வீதியின் மத்திய கோட்டிற்குச் சமாந்தரமாகவும் 300 அடி தூரத்திலும் உறுவல் ஓயாவின் மத்திய கோட்டினைச் சந்திக்கும்வரை ; அங்கிருந்து கிழக்கு நோக்கி சொல்லப்பட்ட ஓயாவின் மத்திய கோட்டின் ஓரமாக சொல்லப்பட்ட வீதியின் மத்திய கோட்டிலிருந்து 300 அடி தூரத்திலுள்ள ஓர் இடம்வரை வரையப்பட்ட ஒரு கோட்டினால் ;

கிழக்கு : கடைசியாகக் கூறப்பட்ட இடத்திலிருந்து தென்மேற்கு நோக்கிகடவத்தை கிருந்திவிற்றை வீதியின் மத்திய கோட்டிற்குச் சமாந்தரமாகவும் 300 அடி தூரத்திலும் கலகிற்றியாவ கொனரத்கொட ஆகிய கிராமச்சபைகளின் எல்லைகளைச் சந்திக்கும்வரை ; அங்கிருந்து தென்மேற்கு நோக்கி சொல்லப்பட்ட கிராமச்சபைகளின் எல்லைகளின் ஓரமாக சொல்லப்பட்ட வீதியின் மத்திய கோட்டினைச் சந்திக்கும் வரை ; அங்கிருந்து தெற்கு நோக்கி சொல்லப்பட்ட வீதியின் மத்திய கோட்டின் ஓரமாக கலகிற்றியாவ் பட்டுவத்தை வீதியின் மத்திய கோட்டினைச் சந்திக்கும்வரை வரையப்பட்ட ஒரு கோட்டினால் ;

தெற்கு : கடைசியாகக் கூறப்பட்ட இடத்திலிருந்து மேற்கு நோக்கி கலகிற்றியாவ் பட்டுவத்தை வீதியின் மத்திய கோட்டின் ஓரமாக கடவத்தை கிரிந்திவிற்றை வீதியின் மத்தியகோட்டிலிருந்து 300 அடி தூரத்திலுள்ள ஓர் இடம்வரை ; அங்கிருந்து வடமேற்கு நோக்கி சொல்லப்பட்ட வீதியின் மத்திய கோட்டிற்குச் சமாந்தரமாகவும் 300 அடி தூரத்திலும் கிராம நீதிமன்ற வீதியின் மத்திய கோட்டிலிருந்து 300 அடி தூரத்திலுள்ள ஓர் இடம்வரை ; அங்கிருந்து வடமேற்கு நோக்கி சொல்லப்பட்ட வீதியின் மத்திய கோட்டிற்குச் சமாந்தரமாகவும் 300 அடி தூரத்திலும் கனேமுல்லே–கந்தானே வீதியின் மத்திய கோட்டிலிருந்து 300 அடி தூரத்திலுள்ள ஓர் இடம்வரை ; அங்கிருந்து மேற்கு நோக்கி சொல்லப்பட்ட வீதியின் மத்திய கோட்டிற்குச் சமாந்தரமாகவும் 300 அடி தூரத்திலும் மயான வீதியின் மத்திய கோட்டிலிருந்து 300 அடி தூரத்திலுள்ள ஒரு

இடம்வரை ; அங்கிருந்து தெற்கு நோக்கி செல்லப்பட்ட வீதியின் மத்திய கோட்டிற்குச் சமாந்தரமாகவும் 300 அடி தூரத்திலும் புகையிரதப் பாதையின் மத்திய கோட்டினைச் சந்திக்குமவரை ; அங்கிருந்து மேற்கு நோக்கி செல்லப்பட்ட புகையிரத பாதையின் மத்திய கோட்டின் ஊடாக மயான வீதியின் மத்திய கோட்டிலிருந்து 300 அடி தூரத்திலுள்ள ஓர் இடம்வரை ; அங்கிருந்து வடக்கு நோக்கி செல்லப்பட்ட வீதியின் மத்திய கோட்டிற்குச் சமாந்தரமாகவும் 300 அடி தூரத்திலும் கலஹிற்றிய வ கந்தானை வீதியின் மத்திய கோட்டிலிருந்து 300 அடி தூரத்திலுள்ள ஓர் இடம்வரை ; அங்கிருந்து மேற்கு நோக்கிச் செல்லப்பட்ட வீதியின் மத்திய கோட்டிற்குச் சமாந்தரமாகவும் 300 அடி தூரத்திலும் கொனுகஹ எல்லையின் மத்திய கோட்டினைச் சந்திக்கும் வரை வரையப்பட்ட ஒரு கோட்டினால் ;

மேற்கு : கடைசியாகக் கூறப்பட்ட இத்திலிருந்து வடக்கு நோக்கி கொனுகஹ எல்லையின மத்திய கோட்டின ஊடாக பிரதேசத்தின் வடஎல்லை ஆரம்பிக்கும் இடம்வரை வரையப்பட்ட ஒரு கோட்டினால்.

12–725—31.12.76 ந் திகதிய வர்த்தமானி இல. 246

---

### வீடமைப்பு, நகரச் சீர்திருத்தக் கட்டளைச்சட்டம்

(268 ஆம் அத்தியாயமான) வீடமைப்பு, நகரச் சீர்திருத்தக்கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் உள்ளூராட்சி அமைச்சரினால் ஆக்கப்பட்ட கட்டளை.

டபிள்யூ. பீ. ஜீ. ஆரியதாச,
உள்ளூராட்சி அமைச்சர்.

கொழும்பு
1976 ம் ஆண்டு ஒற்றோபர் மீ 25 ந் வெ.

### கட்டளை

வீடமைப்பு, நகரச்சீர்திருத்தக் கட்டளைச்சட்டத்தின் நோக்கங்களுக்காக கொழும்பு மாவட்டத்திலுள்ள கலஹிற்றியாவ கிராமப் பிரதேசத்தின் நிர்வாக எல்லைகளுள்ளான உள்ளூர் அதிகாரசபை இக்கட்டளை கஸெற்றில் பிரசுரிக்கப்படும் திகதியிலிருந்து அந்தக் கிராமப் பிரதேசத்தின் கிராமச் சபையாக இருத்தல் வேண்டுமென இத்தால் பணிக்கப்படுகிறது.

12–724—31.12.76 ந் திகதிய வர்த்தமானி இல. 246

---

### நீர்கொழும்பு மாநகரசபை

### வாடி வீடுகள் சட்டம்

(275 ம் அத்தியாயமான) வாடிவீடுகள் சட்டத்தின் 4 ம் பிரிவின்கீழ் நீர்கொழும்பிலுள்ள புதிய வாடிவீடு சம்பந்தமாக, அதன் சார்பாக, உரிய அதிகாரியான நீர்கொழும்பு மாநகரசபையின் விசேட ஆணையாளரினால் ஆக்கப்பட்டு அப்பிரிவின் (2) ம் உட்பிரிவினால் தமக்குரித்தாக்கப் பட்ட தத்துவங்களைக் கொண்டு உள்ளூராட்சி அமைச்சரால் அங்கீகரிக்கப் பட்ட விதி.

டீ. ஈ. எச். அமரசேகர,
செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு.
1976 ம் ஆண்டு நொவெம்பர் மீ 18 ந் வெ,

### விதி

நீர்கொழும்பிலுள்ள புதிய வாடிவீடு சம்பந்தமாக 1953 செத்தெம்பர் 4 ந் தேதிய 10,586 ம் இலக்கக் கசற்றில் பிரசுரிக்கப்பட்டு காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான விதி, அதனோடுள்ள அட்டவணைக்குப் பதிலாகப் பின்வரும் புதிய அட்டவணையை இவ்வேதன் மூலம், இத்தால் மேலுந் திருத்தஞ் செய்யப்படுகின்றது.

### அட்டவணை

புதிய வாடி வீட்டை உபயோகிப்பது, அதில் தங்கியிருப்பது சம்பந்தமாகச் செலுத்தப்படற்பாலதான கட்டணங்களும் கட்டண விதிப்புக் களும்.

| | ரூ. ச. |
|---|---|
| 1. படுக்கையறையல்லாத வாடிவீட்டின் எப்பாகத்தையும் உணவொன்றை அருந்துவதற்கல்லாத வேறேதேனும் நோக்கத்திற்கு உபயோகிப்பதற்கு, ஒவ்வொரு மணித்தியாலத்திற்கும் அல்லது அதன் பாகத்திற்கும் ஆளொருவருக்கு | 0 25 |
| 2. பிற்பகல் தேனீர் தவிர்ந்த உணவொன்றை அருந்தும் நோக்கத்திற்காகப் படுக்கையறையல்லாத, வாடி வீட்டின் எப்பாகத்தையும் உபயோகிப்பதற்கு ஒரு மணித்தியாலம் கொண்ட ஒவ்வொருகாலப்பகுதிக்கும் அல்லது அதன் பாகத்திற்கு ஆளொருவருக்கு | 0 50 |
| (அ) 1 ம், 2 ம், 3 ம், 4 ம், 5 ம், 8 ம், 9 ம் அல்லது 10 ம் இலக்கப்படுக்கையறைகளில் ஏதாவதொன்றில் தங்கியிருப்பதற்கு, இருபத்திநான்கு மணித்தியாலங் கொண்ட காலப்பகுதிக்கு அல்லது அதன் பாகத்துக்கு ஆளொருவருக்கு | 10 0 |
| (ஆ) வாடிவீட்டில் 6 ம் இலக்க 7 ம் இலக்க படுக்கையொன்றில் தங்கியிருப்பதற்கு, இருபத்திநானகு மணித்தியாலங் கொண்ட காலப்பகுதிக்கு அல்லது அதன் பாகத்திற்கு ஆளொருவருக்கு | 15 0 |
| (இ) வாடிவீட்டின் புதிய பகுதியிலுள்ள 11 ம் இலக்கப் படுக்கையறை தொடக்கம் 22 ம் இலக்கப் படுக்கையறை வரை ஏதேனும் படுக்கையறையொன்றில் தங்கியிருப் பதற்கு, இருபத்திநான்கு மணித்தியாலங்கொண்ட காலப்பகுதிக்கு அல்லது அதன்பாகத்திற்கு ஆளொரு வருக்கு | 30 0 |
| (ஈ) படுக்கையறையொன்றை உபயோகிப்பதற்கு ஒரு மணித்தியாலத்திற்கு மேற்படாத காலப்பகுதிக்கு (1) ம் அல்லது (2) ம் விடயத்தின் கீழ் செலுத்தப்படற்பாலதான விதிப் பணத்துக்கு மேலதிகமாக, ஆளொருவருக்கு | 5 0 |
| (இவ்விதிப்பணம், படுக்கை, படுக்கை விரிப்பு, விளக்குகள் மின்விசிறிகள் ஆகியவற்றின் உபயோகத்திற்கான வற்றை உள்ளடக்குவதாகும்). | |
| 4. ஆறு மணித்தியாலங்களிற்கு மேற்படாத காலப்பகுதி எதற்கும் கலியாணம் அல்லது வேறு ஒழுங்கு செய்யப்பட்ட வரவேற்பு எதனையும் பொருட்டுச் சாப்பாட்டு மண்டபத்தை அல்லது தோட்டத்தை ஆணையாளரின் முன்னனுமதியுடன் உபயோகிப்பதற்கு | 50 0 |
| (1) ம் விடயத்தின் கீழ் அறவிடற்பாலதான தங்குவதன் பொருட்டான விதிப்பணம் அறவிடப்படமாட்டாது) வாகனக் கூடம் உபயோகிப்பதற்கான விதிப்பணம். | |
| 5. வாகனக்கூடம் ஒன்றை உபயோகிப்பதற்கு இருபத்திநான்கு மணித்தியாலங்களைக் கொண்ட ஒவ்வொரு காலப்பகுதிக்கும் அல்லது அதன் பாகத்திற்கும் | 3 0 |

12–726—31.12.76 ந் திகதிய வர்த்தமானி இல. 246

---

ச. வ. பீ. 89/52

### வாடிவீடுகள் சட்டம்

(275 ஆம் அத்தியாயமான) வாடிவீடுகள் சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் அதன்சார்பிலான தோதான அதிகாரியான அவிசாவலை நகரசபையின் விசேட ஆணையாளரால் செய்யப்பட்ட பட்டினத்தில் அமைந்துள்ள வாடிவீடு சம்பந்தமாக ஆக்கப்பட்டு, அப்பிரிவினால் அவருக்குரித்தாக்கப் பட்ட தத்துவங்களைக் கொண்டு உள்ளூராட்சி அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட விதிகள்.

டீ. ஈ. எச். அமரசேகர,
செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு.
1976.11.18.

### விதிகள்

1. இவ்விதிகள் 1976 ஆம் ஆண்டின் அவிசாவலை வாடிவீட்டு விதிகள் என எடுத்துக் காட்டப்படலாம்.

2. இதனோடுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விகிதங்களிலான கட்டணங்கள் வாடிவீட்டின் எப்பாகத்தையும் பயன்படுத்தும் அல்லது அதில் தங்கியிருக்கும், ஒவ்வொருவரினாலும் செலுத்தப்படல் வேண்டும். ஒவ்வொருவரதும் சிட்டின் மொத்தப் பெறுமதியின் பத்துச் சதவீதமான சேவைக்கட்டணமொன்று வாடிவீட்டுக் காப்பாளரினால் அறவிடப்படல் வேண்டும்.

3.(1) விருந்தினர் ஒவ்வொருவரும் அவர் வாடிவீட்டில் அனுமதிக்கப்பட்டவுடன், வாடிவீட்டில் அந்நோக்கத்துக்கென பேணப்படும் இடாப்பில் அவரது பெயரையும், முகவரியையும், அவர் வாடிவீட்டுக்கு வந்து சேர்ந்த திகதியையும், நோக்கத்தையும் தெளிவாக எழுதுதல் வேண்டும்.

(2) விருந்தினர் எவரும், அவர் முற்போந்த பந்தியின் தேவைப்பாடுகளுக்கிணங்கி ஒழுகும்வரை வாடிவீட்டின் எப்பகுதியிலும் தங்குதலோ அல்லது பரிமாறப்படுதலோ ஆகாது.

(3) விருந்தினர் ஒவ்வொருவரும் வாடிவீட்டைவிட்டு வெளியேறும்போது, வாடி வீட்டில் அந்நோக்கத்துக்கென பேணப்படும் இடாப்பில் அவர் புறப்படும் திகதியையும் நேரத்தையும் எழுதுதல் வேண்டும்.

4. (1) வாடிவீட்டுக் கட்டணங்கள் கோரப்படும்போது காசாகச் செலுத்தப்படல் வேண்டும்.

(2) அளிக்கப்பட்ட சேவைகளினதும் அவற்றுக்காக அறவிடப்பட்ட கட்டணங்களினதும் விவரங்களைக் கொண்ட பற்றுச்சீட்டொன்று வாடிவீட்டுக் காப்பாளரால் விருந்தினர் ஒவ்வொருவருக்கும் வழங்கப்படல் வேண்டும்.

5. விருந்தினர் அல்லது அவரது வேலையாள் எவராலும் சேதப்படுத்தப்பட்ட அல்லது உடைக்கப்பட்ட பொருட்கள் அனைத்தினதும் பெறுமதி அல்லது அவற்றைப் பழுதுபார்த்தல் செலவுகள் அவ்விருந்தினரால் செலுத்தப்படல் வேண்டும். வாடிவீட்டுக்காப்பாளர், விருந்தினருக்கு வழங்கப்படும் பற்றுச்சீட்டில் இச் செலவையும் சேர்த்தல் வேண்டும்.

6. (1) வாடிவீடுபற்றிய அல்லது அதன் முகாமைபற்றிய முறைப்பாடு அல்லது குறிப்புரை எதனையும் விருந்தினர் பதிவதற்கான முறைப்பாட்டுப் புத்தகமொன்றினை வாடிவீட்டுக் காப்பாளர் வைத்திருத்தல் வேண்டும்.

(2) முறைப்பாட்டுப் புத்தகத்தினைக் காண்பிக்குமாறு கேட்கப்படும்போது அவ்வாறு செய்தல் வாடிவீட்டுக் காப்பாளரின் கடமையாதல் வேண்டும்.

7. வாகனம் எதுவும் அத்தகைய வாகனம் வாடிவீட்டு விருந்தினர் ஒருவருக்குச் சொந்தமானதாயிருந்தாலன்றி, வாடிவீட்டுக் காப்பாளரின் அனுமதியின்றி வாடிவீட்டின் வளவுக்குள் நிறுத்திவைக்கப்படலாகாது.

8. (1) முன்கூட்டியே வாடிவீட்டில் இடவசதியை ஒதுக்கி வைத்திருக்கப்பட விரும்பும் விருந்தினர் எவரும் வாடிவீட்டுக் காப்பாளருக்குக் குறைந்தபட்சம் 3 முழு நாள் அறிவித்தலாவது கொடுப்பதன் மூலம் அவ்வாறு செய்து கொள்ளலாம்.

(2) ஓராம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவித்தலுடன் ஆளொருவருக்கு ரூபா 5/- வீதமான பணமும் அனுப்பப்படல் வேண்டும்.

(3) இடவசதி ஒதுக்கப்படுதற்கு உணவுகள் வழங்கலுக்குமாக தந்தி வாயிலான வேண்டுகோளொன்றுளது அனுப்புபவரின் பெயரும் முகவரியும் குறிப்பிடப்படுவதுடன் விதிக்கப்பட்ட கட்டணங்களையும் கொண்டுள்ளதாயிருத்தல் வேண்டும்.

(4) ஒதுக்கப்பட்ட இடவசதி ஒழுங்கு செய்யப்பட்டவாறு எடுக்கப்படாவிடில் அனுப்பப்பட்ட பணம் இழக்கப்படல் வேண்டும்.

ஆயின், அத்தகைய ஒதுக்கீட்டை நீக்கஞ் செய்யுமாறு வேண்டும் 24 மணித்தியால அறிவித்தல் ஒன்று வாடிவீட்டுக் காப்பாளருக்குக் கிடைக்கு மிடத்து அனுப்பப்பட்ட பணம் மீளளிக்கப்படலாம்.

9. இவ்விதிகள் எதையும் மீறுதல் ஐம்பது ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பண மொன்றினால் தண்டிக்கப்படற்பாலதாதல் வேண்டும்.

10. வாடிவீட்டுக் காப்பாளரினால் சேகரிக்கப்படும் பின்வரும் கட்டணங்கள் சபையின் பொது நிதியின் வரவுக்கு உடனடியாகச் செலுத்தப்படல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| (அ) தங்குவதற்கான கட்டணங்கள் | .. | முழுத்தொகை |
| (ஆ) சேவைக்கட்டணங்கள் | .. | 50% |
| (இ) குழப்பக்கட்டணங்கள் | .. | 50% |
| (ஈ) வாகனக்கூடக் கட்டணங்கள் | .. | முழுத்தொகை |

11. வாடிவீடுகள் சம்பந்தமாக இதுகாலவரை ஆக்கப்பட்ட விதிகள் அனைத்தும் இத்தால் நீக்கப்படுகின்றன.

அட்டவணை

**தங்கும் கட்டணங்கள்**

(1) படுக்கை அறையொன்றில் தங்குமிடத்து

| | | ரூபா. ச. |
|---|---|---|
| (அ) 3,4, அல்லது 5 ம் இலக்க அறைக்கு—நாளொன்றுக்கு அல்லது அதன் பகுதிக்கு ஆளொருவருக்கு | .. | 6 0 |
| (ஆ) 1, 2, 6, 7, 8 அல்லது 9 ம் இலக்க அறைக்கு—நாளொன்றுக்கு அல்லது அதன் பகுதிக்கு ஆளொருவருக்கு | | 7 50 |
| (இ) 10 ம் இலக்க அறைக்கு—நாளொன்றுக்கு அல்லது அதன் பகுதிக்கு ஆளொருவருக்கு | .. | 10 0 |
| (ஈ) 12 வயதுக்குட்பட்ட பிள்ளைகளுக்கு மேற்படி வீதங்களில் அரைமடங்குக்கு கட்டணங்கள் விதிக்கப்படல் வேண்டும். | .. | — |
| (உ) 2 ம் இலக்க அறையில் சபையின் அலுவலர் ஒருவர் தங்கியிருக்குமிடத்து அல்லது அவரால் பாவிக்கப்படுமிடத்து மாதமொன்றுக்கு | .. | 25 0 |

(2) படுக்கை அறையொன்றில் தங்காதவிடத்து :

| | | ரூபா ச. |
|---|---|---|
| (அ) மணித்தியாலமொன்றுக்கு அல்லது அதன் பகுதிக்கு ஆளொருவருக்கு | .. | 40 |
| (ஆ) அவர்களது சொந்த உணவைக் கொண்டுவந்து அதனை வாடிவீட்டில் வைத்து உட்கொள்ளும் விருந்தினரிடமிருந்து ஆளொருவருக்கு 1/- ரூபா மேலதிகக் கட்டணமாக அறவிடப்படல் வேண்டும் | .. | — |
| (இ) பிற்பகல் 11.00 மணிக்கும் முற்பகல் 6.00 மணிக்குமிடையில் வாடிவீட்டுக்கு வந்து சேரும் அல்லது அதனை விட்டேகும் விருந்தினரிடமிருந்து ஆளொருவருக்கு 2/- ரூபா குழப்பக் கட்டணமாக அறவிடப்படல் வேண்டும். | | |
| (ஈ) விருந்தினருடன் வரும் 12 வயதுக்குட்பட்ட பிள்ளைகளிடமிருந்து இந்த வகுதியின்கீழ் தங்கும் கட்டணமெதுவும் அறவிடப்படலாகாது. | | |

**ஒழுங்கு செய்யப்பட்ட வரவேற்புகள்**

(150க்கு மேற்படாத ஆட்கள் கலந்துகொள்ளும்) தோட்ட விருந்து, கூட்டுவிருந்து, மதிய போசனம், இராப்போசனம், அல்லது வைபவம் எதற்கும் வாடிவீட்டின் எப்பகுதியையும் பயன்படுத்துவதற்கு :

| | | ரூபா ச. |
|---|---|---|
| முதலாவது மணித்தியாலத்துக்கு அல்லது அதன் பகுதிக்கு | .. | 25 0 |
| மேலதிக மணித்தியாலத்துக்கு அல்லது அதன் பகுதிக்கு | .. | 15 0 |
| வெளியேயுள்ள உணவளிப்பவர் ஒருவரால் உணவளிக்கப்படும் பட்சத்தில் | .. | 15 0 |

மேலதிகக் கட்டணமாகச் செலுத்தப்படற்பாலதாகும்.

**வாகனக் கூடம்**

வாகனமொன்றுக்கு இரவொன்றுக்கு 50 சதம்.

12-723—31.12.76 ந் திகதிய வர்த்தமானி இல. 246

நீர்கொழும்பு மாநகரசபை

வாடிவீடுகள் சட்டம்

(275 ம் அத்தியாயமான) வாடிவீடுகள் சட்டத்தின் 4 ம் பிரிவின் கீழ் நீர்கொழும்பிலுள்ள "லகூன்வியூ" வாடிவீடு சம்பந்தமாக, அதன் சார்பாக, உரிய அதிகாரியான நீர்கொழும்பு மாநகர சபையின் விசேட ஆணையாளரினால் ஆக்கப்பட்டு அப்பிரிவின் (2) ம் உட்பிரிவினால் தமக்களிக்கப்பட்ட தத்துவங்களைக்கொண்டு உள்ளூராட்சி அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட விதி.

சீ. சீ. எச். அமரசேகர,
செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு, 1976.11.19.

விதி

நீர்கொழும்பிலுள்ள லகூன்வியூ வாடிவீடு சம்பந்தமாக 1953 செத்தெம்பர் 4 ந் திகதிய 10,586 ம் இலக்கக் கசெற்றில் பிரசுரிக்கப்பட்டு காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறுள்ள விதிகள், அதனோடுள்ள அட்டவணைக்குப் பதிலாகப் பின்வரும் புதிய அட்டவணையை இடுவதன் மூலம், இத்தால் மேலுந் திருத்தஞ் செய்யப்படுகின்றன :—

அட்டவணை

லகூன்வியூ வாடிவீட்டை உபயோகிப்பது அதில் தங்குவிப்பது சம்பந்தமாகச் செலுத்தப்படற்பாலதான கட்டணங்களும் கட்டணவிதிப்புக்களும்.

| | ரூ. ச. |
|---|---|
| 1. படுக்கையறையல்லாத, வாடிவீட்டின் எப்பாகத்தையேனும் உணவொன்றை அருந்துவதல்லாத வேறேதேனும் நோக்கத்திற்கு உபயோகிப்பதற்கு ஒவ்வொரு மணித்தியாலத்திற்கும் அல்லது அதன் பாகத்திற்கும், ஆளொருவருக்கு .. .. | 0.20 |
| 2. பிற்பகல் தேனீர் தவிர்ந்த உணவொன்றை அருந்தும் நோக்கத்திற்காகப், படுக்கையறையல்லாத வாடிவீட்டின் எப்பாகத்தையும் உபயோகிப்பதற்கு ஒரு மணித்தியாலம் கொண்ட ஒவ்வொருகாலப் பகுதிக்கும் அல்லது அதன் பாகத்திற்கும் ஆளொருவருக்கு .. .. | 0.40 |
| 3. வாடிவீட்டிலுள்ள படுக்கையறையொன்றில் தங்கியிருப்பதற்கு, இருபத்திநான்கு மணித்தியாலங்கொண்ட காலப்பகுதிக்கு அல்லது அதன் பாகத்துக்கு, ஆளொருவருக்கு .. | 10.0 |
| 4. படுக்கையறையொன்றை உபயோகிப்பதற்கு ஒரு மணித்தியாலத்திற்கு மேற்படாத காலப்பகுதிக்கு (1) ம் விடயத்தின் கீழ் செலுத்தப்படற்பாலதான கட்டண விதிப்புக்கு மேலதிகமாக, ஆளொருவருக்கு .. .. .. | 3.0 |

(இக்கட்டண விதிப்பு, படுக்கை, படுக்கைவிரிப்பு, விளக்குமின் விசிறி ஆகியவற்றின் உபயோகத்தையும் உட்படுத்தும்)

வாகனக் கூடமொன்றை அல்லது வாடிவீட்டுமுற்றத்தை உபயோகிப்பதற்கான கட்டண விதிப்பு.

| | |
|---|---|
| 5. வாகனகூடமொன்றை உபயோகிப்பதற்கு, இருபத்திநான்கு மணித்தியாலங்கொண்ட ஒவ்வொரு காலப்பகுதிக்கு அல்லது அதன் பாகத்திற்கு .. .. .. | 2.0 |
| 6. வாகனங்களை நிறுத்தி வைப்பதற்காக வாடிவீட்டு முற்றத்தை உபயோகிப்பதற்கு பி.ப. 6.00 மணிக்கும் மு.ப. 6.00 மணிக்கும் இடைப்பட்ட வேளையில் ஆறு மணித்தியாலங்களுக்கு மேற்படாத காலப்பகுதிக்கு வாகனமொன்றிற்கு .. .. | 2.0 |

12–755—31.12.76 ந் திகதிய வர்த்தமானி இல. 246

---

### நாத்தாண்டியாப் பட்டினசபை

பட்டினசபைகள் கட்டளைச் சட்டம்

1977 ஆம் ஆண்டுக்கான விசேட மலகூட வரி

(256 ஆம் அத்தியாயமான) பட்டின சபைகள் கட்டளைச்சட்டத்தின் 129 (ஆ) என்னும் பிரிவின்கீழும் அவருக்குக்கையளிக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு உள்ளூராட்சி ஆணையாளரினால் கொடுக்கப்பட்ட அங்கீகாரத்துடனும் துணைவிதிகளினால் விதிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வரையறைகளுக்கும் விலக்களிப்புகளுக்கும் அமைவாக நாத்தாண்டியாப் பட்டின சபையின் 2 ஆம், 3 ஆம், 4 ஆம், 7 ஆம் வட்டாரங்களில் அமைந்துள்ள நெல்வயல்கள் தவிர்ந்த அசைவற்ற ஆதனங்கள் அனைத்தினதும் வருடாந்தப் பெறுமதியின் நூற்றுக்கு நான்கு வீதமான்தும் முறையே மார்ச் 31, யூன் 30, செத்தெம்பர் 30, திசெம்பர் 31 ஆகிய திகதிகளில் நான்கு தவணைகளில் சமதொகைகளாகச் செலுத்தப்படற்பாலதுமான ஒரு விசேட மலகூட வரியை நாத்தாண்டியாப் பட்டினசபை விதித்துள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

டபிள்யூ. ஈ. வீ. எஸ். த அல்விஸ்,
உள்ளூராட்சி ஆணையாளர்.

கொழும்பு, 1976.

12–807—31.12.76 ந் திகதிய வர்த்தமானி இல. 246

---

### முகமாலைக் கிராமசபை

களியாட்டவரிக் கட்டளைச் சட்டம்

(267 ஆம் அத்தியாயமான) களியாட்டவரிக் கட்டளைச்சட்டத்தின் 2 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின்கீழ் யாழ்ப்பாணம் மாவட்டத்திலுள்ள முகமாலைக் கிராமப்பிரதேசத்தின் கிராமசபையினால் நிறைவேற்றப்பட்ட பின்வரும் தீர்மானம் உள்ளூராட்சி அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றமையினால், அப்பிரிவின் (2) ம் உட்பிரிவின் பிரகாரம் பிரசுரிக்கப்படுகின்றது.

#### தீர்மானம்

சபையின் நிருவாக எல்லைகளுக்குள் நடத்தப்படும் (கட்டளைச்சட்டத்தின் வரையறுக்கப்பட்டுள்ளவாறான) களியாட்டங்களுக்கான அனுமதிக்கட்டணங்கள் மீது (267 ம் அத்தியாயமான) களியாட்டவரிக் கட்டளைச்சட்டத்தின் 2 ம் பிரிவின் (1) ம் உடபிரிவின்கீழ் இதன்கீழ்க்காட்டப்பட்டுள்ள விகிதங்களின்படியான ஒரு வரியை இத்தீர்மானம் கசெற்றில் பிரசுரிக்கப்படும் திகதியிலிருந்து இச்சபை இத்தால் விதித்து அறிவிக்கின்றது.

| கட்டணத்தொகை | வரிவிகிதம் |
|---|---|
| வரித்தொகை நீங்கலாக அனுமதிக்கட்டணம் | ரூ. ச. |
| (அ) 20 சதத்திற்குக் குறையாமலும் ஆனால் 50 சதத்திற்கு மேற்படாமலிருக்குமிடத்து | 0 05 |
| (ஆ) 50 சதத்திற்கு மேற்படவும் ஆனால் 1.00 ரூபாவிற்கு மேற்படாமலிருக்குமிடத்து | 0 10 |
| (இ) 1.00 ரூபாவிற்கு மேற்படவும் ஆனால் 1 ரூபா 50 சதத்திற்கு மேற்படாமலிருக்குமிடத்து | 0 15 |
| (ஈ) 1 ரூபா 50 சதத்திற்கு மேற்படவும் ஆனால் 2.00 ரூபாவிற்கு மேற்படாமலிருக்குமிடத்து | 0 20 |
| (உ) 2.00 ரூபாவிற்கு மேற்படவும் ஆனால் 2 ரூபா 50 சதத்திற்கு மேற்படாமலிருக்குமிடத்து | 0 25 |
| (ஊ) 2.00 ரூபா 50 சதத்திற்கு மேற்படவும் ஆனால் 3.00 ரூபாவிற்கு மேற்படாமலிருக்குமிடத்து | 0 30 |
| (எ) 3.00 ரூபாவிற்கு மேற்படவும் ஆனால் 4.00 ரூபாவிற்கு மேற்படாமலிருக்குமிடத்து | 0 40 |
| (ஏ) 4.00 ரூபாவிற்கு மேற்படவும் ஆனால் 5.00 ரூபாவிற்கு மேற்படாமலிருக்குமிடத்து | 0 50 |
| (ஐ) 5.00 ரூபாவிற்கு மேற்படவும் ஆனால் 10.00 ரூபாவிற்கு மேற்படாமலிருக்குமிடத்து | 1 0 |
| (ஒ) 10.00 ரூபாவிற்கு மேற்படுமிடத்து— | |
| (1) முதல் 10.00 ரூபாவிற்கு .. | 1 0 |
| (2) மேலதிக ஒவ்வொரு 5.00 ரூபாவிற்கு அல்லது அதன் பகுதிக்கு .. .. .. | 1 0 |

சீ. ஈ. எச். அமரசேகர,
செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு,
1976 ம் ஆண்டு திசெம்பர் மீ 1 ந் உ.

12–808—31.12.76 ந் திகதிய வர்த்தமானி இல. 246

---

### கிராமாட்சி மன்றங்களின் கட்டளைச் சட்டம்

13 ம் பிரிவின் கீழான அறிவித்தல்

1961 ம் ஆண்டின் 60 ம் இலக்கக் கிராமாட்சி மன்றங்கள் (திருத்தம்) அதிகாரச்சட்டத்தால் திருத்தப்பட்ட கிராமாட்சி மன்றங்கள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 257) 13 (1) ம் பிரிவால் எனக்களிக்கப்பட்ட அதிகாரங்களைக் கொண்டு, மன்னார் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கனகநாயகம் நல்லைநாதன் ஆகிய நான் மன்னார் மாவட்டத்து பெருங்கமிப்பற்று கிராமாட்சி மன்றத்தின் 4 ம் வட்டார உறுப்பினர் திரு. இராமலிங்கம் நாகமுத்து, அவருடைய செரிவின் பின்னர், மன்றத்துக்கு அறிவித்தலின்றி, மன்றத்தின் அடுத்தடுத்த மூன்றுக்கு மேற்பட்ட கூட்டங்களுக்குச் செல்லவில்லை என்பதைத்திருப்திகரமாய் அறிந்து மன்னார் மாவட்டத்து பெருங்கமிப்பற்று கிராமாட்சி மன்றத்தின் 4 ம் வட்டார உறுப்பினர் திரு. இராமலிங்கம் நாகமுத்து, இவ்வறிவித்தல் அரசாங்க செயதிமடலில் வெளியிடப்படும் திகதியிலிருந்து தனது பதவியைவிட்டு நீங்கியுள்ளாரென்பதை இத்தால் வெளிப்படுத்துகிறேன்.

கனகநாயகம் நல்லைநாதன்,
உள்ளூராட்சி உதவி ஆணையாளர், மன்னார்.

உள்ளூராட்சி அலுவலகம்,
மன்னார், 1976 ம் ஆண்டு மார்கழி மீ 17 ந் உ.

12–796—31.12.76 ந் திகதிய வர்த்தமானி இல. 246

# துணை விதிகள்

## எட்டியாந்தோட்டைப் பட்டினசபை

### பட்டினசபைகள் கட்டளைச்சட்டம்

(256 ஆம் அத்தியாயமான) பட்டினசபைகள் கட்டளைச்சட்டத்தின் 152, 156 ஆகிய பிரிவுகளின்கீழ் எட்டியாந்தோட்டைப் பட்டினசபையின் விசேட ஆணையாளரினால் ஆக்கப்பட்டவையும் அக்கட்டளைச்சட்டத்தின் 153 ம் பிரிவினால் தமக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக்கொண்டு உள்ளூராட்சி அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டவையுமான துணை-விதிகள்.

சீ. ஈ. எச். அமரசேகர,
செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு,
1976 ம் ஆ நவெம்பர் மீ 18 ந் உ.

### துணை-விதிகள்

1. இதனோடுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விகிதங்களுக்கிணங்கத் தீர்மானிக்கப்படும் கட்டணமொன்று புதிய கட்டடங்களுக்காக அல்லது தற்போதுள்ள கட்டடங்களில் மாற்றங்கள் செய்வதற்காக (268 ஆம் அத்தியாயமான) வீடமைப்பு, நகரச் சீர்திருத்தக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் சமர்ப்பிக்கப்படும் வரைவுப்படங்களைப் பரிசோதனை செய்வது சம்பந்தமாகச் செலுத்தப்படுதல் வேண்டும்.

2. துணை-விதி 1 இன் கீழ்ச் செலுத்தப்படற்பாலதான கட்டணத்தொகை எட்டியாந்தோட்டைப் பட்டினசபைத் தலைவரிடமிருந்து கோரிக்கையொன்று கிடைக்கப்பெற்ற திகதியிலிருந்து ஏழுநாட்களுக்குள், அங்கீகாரத்துக்காக அல்லது சம்மதத்துக்காக விண்ணப்பம்செய்யும் நபரினால் செலுத்தப்படுதல் வேண்டும்.

3. 1 ம் துணை-விதியில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணம் செலுத்தப்படும் வரை வரைவுப்படமெதுவும் பரிசோதனை செய்யப்படவும் பரிசீலனை செய்யப்படவுமாகாது.

4. இத்துணை-விதிகளில் "தலைவர்" என்பது எட்டியாந்தோட்டைப் பட்டின சபையின் தலைவர் அல்லது விசேட ஆணையாளர் எனப் பொருள்படும்.

### அட்டவணை

புதிய கட்டடங்களுக்கான அல்லது மேலதிக நிலப்பரப்பு சம்பந்தப்பட்ட தற்போதுள்ள கட்டடங்களின் உள்ள மாற்றங்களுக்கான வரைவுப்படங்கள் :—

| | குடியிருக்கும் வீடுகளுக்கு | இதர கட்டடங்களுக்கு |
|---|---|---|
| | ரூ. ச. | ரூ. ச. |
| (அ) மொத்த நிலப்பரப்பு 500 சதுர அடிக்கு மேற் கட்டடபடாதவிடத்து | கட்டணமில்லை | 10 0 |
| (ஆ) மொத்த நிலப்பரப்பு 500 சதுர அடிக்கு மேற்பட்டு ஆனால் 1000 சதுர அடிக்கு மேற்படாதவிடத்து | 10 0 | 15 0 |
| (இ) மொத்த நிலப்பரப்பு 1000 சதுர அடிக்கு மேற்பட்டு ஆனால் 1500 சதுர அடிக்கு மேற்படாதவிடத்து | 15 0 | 20 0 |
| (ஈ) மொத்த நிலப்பரப்பு 1500 சதுர அடிக்கு மேற்பட்டு ஆனால் 2000 சதுர அடிக்கு மேற்படாதவிடத்து | 20 0 | 25 0 |
| (உ) 2000 சதுர அடிக்கு மேற்பட்ட 100 சதுர அடியைக் கொண்ட ஒவ்வொரு மேலதிகக்கூறுக்கும் அல்லது அதன் பாகத்துக்கும் | 2 50 | 5 0 |
| 2. புதிய வரைவுப்படங்கள் எதுவும் சமர்ப்பிக்கப்படாமல் அங்கீகாரத்தைப் புதுப்பிப்பதற்கான விண்ணப்பமொன்றன் விடயத்தில் | 2 50 | 5 0 |

இந்த அட்டவணையில் "நிலப்பரப்பு" என்பது கீழ்த்தளத்தில் அல்லது வேறெந்த மாடியிலுமுள்ள இடம் எனப் பொருள்படும்.

12–214—31.12.76 ந் திகதிய வர்த்தமானி இல. 246

---

## பிலியந்தலைப் பட்டின சபை

### பட்டினசபைகள் கட்டளைச்சட்டம்

(256 ஆம் அத்தியாயமான) பட்டினசபைகள் கட்டளைச்சட்டத்தின் 152, 156 ஆகிய பிரிவுகளின்கீழ் பிலியந்தலைப் பட்டினசபையால் ஆக்கப்பட்டவையும் அக்கட்டளைச்சட்டத்தின் 153 ஆம் பிரிவினால் தமக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு உள்ளூராட்சி அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டவையுமான துணை-விதிகள்.

சீ. ஈ. எச். அமரசேகர,
செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு, 1976.

### துணைவிதிகள்

1. இதனோடுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விகிதங்களுக்கிணங்கத் தீர்மானிக்கப்படும் கட்டணமொன்று புதிய கட்டடங்களுக்காக அல்லது தற்போதுள்ள கட்டடங்களில் மாற்றங்கள் செய்வதற்காக (268 ஆம் அத்தியாயமான) வீடமைப்பு, நகரச் சீர்திருத்தக்கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் சமர்ப்பிக்கப்படும் வரைவுப்படங்களைப் பரிசோதனை செய்வது சம்பந்தமாகச் செலுத்தப்படுதல் வேண்டும்.

2. துணை-விதி 1 இன் கீழ்ச் செலுத்தப்படற்பாலதான கட்டணத்தொகை பிலியந்தலைப் பட்டினசபைத் தலைவரிடமிருந்து கோரிக்கையொன்று கிடைக்கப்பெற்ற திகதியிலிருந்து ஏழுநாட்களுக்குள், அங்கீகாரத்துக்காக அல்லது சம்மதத்துக்காக விண்ணப்பம் செய்யும் நபரினால் செலுத்தப்படுதல் வேண்டும்.

3. 1 ம் துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணம் செலுத்தப்படும் வரை வரைவுப்படமெதுவும் பரிசோதனை செய்யப்படவும் பரிசீலனை செய்யப்படவுமாகாது.

### அட்டவணை

புதிய கட்டடங்களுக்கான அல்லது மேலதிக நிலப்பரப்பு சம்பந்தப்பட்ட தற்போதுள்ள கட்டடங்களில் உள்ள மாற்றங்களுக்கான வரைவுப் படங்கள் :—

| | குடியிருக்கும் வீடுகளுக்கு | இதரகட்டடங்களுக்கு |
|---|---|---|
| | ரூ. ச. | ரூ. ச. |
| (அ) மொத்த நிலப்பரப்பு 500 சதுர அடிக்கு மேற் கட்டடபடாதவிடத்து | கட்டணமில்லை | 10 0 |
| (ஆ) மொத்த நிலப்பரப்பு 500 சதுர அடிக்கு மேற்பட்டு ஆனால் 1000 சதுர அடிக்கு மேற்படாதவிடத்து | 10 0 | 15 0 |
| (இ) மொத்த நிலப்பரப்பு 1000 சதுர அடிக்கு மேற்பட்டு ஆனால் 1500 சதுர அடிக்கு மேற்படாதவிடத்து | 15 0 | 20 0 |
| (ஈ) மொத்த நிலப்பரப்பு 1500 சதுர அடிக்கு மேற்பட்டு ஆனால் 2000 சதுர அடிக்கு மேற்படாதவிடத்து | 20 0 | 25 0 |
| (உ) 2000 சதுர அடிக்கு மேற்பட்ட 100 சதுர அடியைக் கொண்ட ஒவ்வொரு மேலதிக கூறுக்கும் அல்லது அதன் பாகத்துக்கும் | 2 50 | 5 0 |
| 2. புதிய வரைவுப்படங்கள் எதுவும் சமர்ப்பிக்கப்படாது அங்கீகாரத்தைப் புதுப்பிப்பதற்கான விண்ணப்பமொன்றின் விடயத்தில் | 2 50 | 5 0 |

இந்த அட்டவணையில் "நிலப்பரப்பு" என்பது கீழ்த்தளத்தில் அல்லது வேறெந்த மாடியிலுமுள்ள இடம் எனப் பொருள்படும்.

12–201—31.12.76 ந் திகதிய வர்த்தமானி இல. 246

### மொறட்டுவைப் பட்டினம்

*நகரசபைகள் கட்டளைச்சட்டம்*

(255 ம் அத்தியாயமான) நகரசபைகள் கட்டளைச்சட்டத்தின் 153, 157 ஆகிய பிரிவுகளின்கீழ் மொறட்டுவைப் பட்டினத்து விசேட ஆணையாளரினால் ஆக்கப்பட்டு அக்கட்டளைச் சட்டத்தின் 154 ம் பிரிவினால் தமக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு உள்ளூராட்சி அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணை–விதி.

சி. ஈ. எச். அமரசேகர,
செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு,
1976 ம் ஆண்டு நவெம்பர் மீ 18 ந் உ.

#### துணை விதிகள்

1. இதனோடுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விகிதங்களுக் கிணங்கத் தீர்மானிக்கப்படும் கட்டணமொன்று புதிய கட்டடங்களுக்காக அல்லது தற்போதுள்ள கட்டடங்களில் மாற்றங்கள் செய்வதற்காக (268 ஆம் அத்தியாயமான) வீடமைப்பு, நகரச் சீர்திருத்தக்கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் சமர்ப்பிக்கப்படும் வரைவுப்படங்களைப் பரிசோதனைசெய்து பரிசீலனை செய்வது சம்பந்தமாகச் செலுத்தப்படல் வேண்டும்.

2. துணை–விதி (1) இன் கீழ்ச் செலுத்தப்படற்பாலதாய கட்டணம் அங்கீகாரம் அல்லது சம்மதம் கேட்டு விண்ணப்பிக்கும் நபரினால் தலைவரிடமிருந்து கோரிக்கையொன்று கிடைக்கப்பெற்று ஏழு நாட்களுக்குள் செலுத்தப்படல் வேண்டும்.

3. துணை–விதி (1) இன் கீழ்ச் செலுத்தப்படற்பாலதாய கட்டணம் செலுத்தப்படும்வரை வரைவுப்படமெதுவும் பரிசோதனை செய்யப்படுதலோ பரிசீலனை செய்யப்படுதலோவாகாது.

4. இத்துணை–விதிகளில் :
"தலைவர்" என்பது மொறட்டுவை நகரசபையின் தலைவர் அல்லது விசேட ஆணையாளர் எனப்பொருள்படும்.

*அட்டவணை*

1. புதிய கட்டடங்களுக்கான அல்லது மேலதிக நிலப்பரப்பு சம்பந்தப்பட்ட தற்போதுள்ள கட்டடங்களில் மாற்றங்கள் செய்வதற்கான வரைவுப் படங்களுக்கு. ரூ. ச.

| | ரூ. | ச. |
|---|---|---|
| (அ) மொத்த நிலப்பரப்பு 500 சதுர அடிக்கு மேற்படாதவிடத்து | 5 | 0 |
| (ஆ) மொத்த நிலப்பரப்பு 500 சதுர அடிக்கு மேற்பட்டு ஆனால் 1000 சதுர அடிக்கு மேற்படாதவிடத்து | 15 | 0 |
| (இ) மொத்த நிலப்பரப்பு 1000 சதுர அடிக்கு மேற்பட்டு ஆனால் 2000 சதுர அடிக்கு மேற்படாதவிடத்து | 25 | 0 |
| (ஈ) மேலதிக ஒவ்வொரு 1000 சதுர அடிக்கு அல்லது அதன் பாகத்துக்கு | 25 | 0 |

2. மேலதிக நிலப்பரப்பு சம்பந்தப்படாத தற்போதுள்ள கட்டடங்களில் மாற்றங்கள் செய்வதற்கான வரைவுப்படங்களுக்கு.

| | | |
|---|---|---|
| (அ) தற்போதுள்ள நிலப்பரப்பு 500 சதுரஅடிக்கு மேற்படாதவிடத்து | 10 | 0 |
| (ஆ) மேலதிக ஒவ்வொரு 500 சதுர அடிக்கு அல்லது அதன் பாகத்துக்கு | 10 | 0 |
| 3. தற்காலிகக் கட்டடங்களுக்கான வரைவுப் படங்களுக்கு .. | 3 | 0 |
| 4. புதிய வரைவுப்படங்கள் எதுவும் சமர்ப்பிக்கப்படாமல் அங்கீகாரத்தைப் புதுப்பித்தற்கான விண்ணப்பம் ஒன்றின்விடயத்தில் | 10 | 0 |

இவ் வட்டவணையில் "நிலப்பரப்பு" என்பது கீழ்த்தளத்தில் அல்லது வேறெந்த மாடியிலுள்ள இடம் எனப் பொருள்படும்.

12–727—31.12.76 ந் திகதிய வர்த்தமானி இல. 2.6

---

### கோட்டைப் பட்டினம்

*நகரசபைகள் சட்டளைச் சட்டம்*

(255 ஆம் அத்தியாயமான) நகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 184 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 153, 157 ஆகிய பிரிவுகளின் கீழ் கோட்டைப் பட்டின விசேட ஆணையாளரினால் ஆக்கப்பட்டு, அக்கட்டளைச் சட்டத்தின் 154 ஆம் பிரிவினால் தமக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு உள்ளூராட்சி அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதி.

சி. ஈ. எச். அமரசேகர,
செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு,
1976 ம் ஆண்டு நவெம்பர் மீ 18 ந் உ.

#### துணைவிதி

1966.04.07 ஆந் தேதிய 14,960 ஆம் இலக்கக் கசெற்றில் வெளியிடப்பட்ட தீர்மானத்தின் வாயிலாகக் கோட்டை நகரசபையால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நியமத்துணைவிதிகளின் XVI ஆம் பாகத்தின் 1 ஆம் துணைவிதியின் நோக்கத்துக்காக, சல்பித்தி கோறளை பல்லேபத்துவில் உள்ள பறகஹா ஒவித்த எனும் காணியில் நுகெகொடையில் அமைந்துள்ள சபையினால் தாபிக்கப்பட்டுள்ள நுகெகொட பொதுச் சந்தைக்கான சந்தைப்பிரதேசம் பின்வருமாறுகவிருத்தல் வேண்டும்.

பின்வரும் எல்லைகளைக் கொண்ட பிரதேசம் அனைத்தும்—

வடக்கு : பாகொட வீதி (ஸ்ரான்லி திலகரத்தின மாவத்தை) பிரதான கோட்டை நுகேகொடை அரசாங்கக் கட்டு வேலைத் திணைக்கள வீதியுடன் இணையும் சந்தியின் மத்தியிலிருந்து நேர் கிழக்காகவும் நேர் மேற்காகவும் கீழே விவரிக்கப்பட்டுள்ள கிழக்கு மேற்கு ஆகிய எல்லைகளைச்சந்திக்கும் வரை வரையப்பட்ட கோடுகளினூலும் புகையிரத நிலைய வீதியிலிருந்து புகையிரத நிலைய ஒழுங்கையின் வட எல்லையோரமாக, கீழே விவரிக்கப்பட்ட கிழக்கெல்லையைச் சந்திக்கும் வரை வரையப்பட்ட ஒரு கோட்டினூலும் ;

மேற்கு : தற்போதைய கோட்டை நகரசபையின் தெற்கெல்லையிலிருந்து நேர்வடக்காக ஸ்ரான்லிதிலகரத்தின மாவத்தை (நுகேகொடை புகையிரத நிலைய வீதி) யின் மத்திய கோட்டுக்கு 3 சங்கிலி அப்பாலும் அதற்குச்சமாந்தரமாகவும் திலாகா தோட்ட வீதியைச் சந்திக்கும் வரைக்கும், அங்கிருந்து கிழக்கெல்லைக்குச் சமாந்தரமாக வடஎல்லையைச் சந்திக்கும் வரைக்கும் வரையப்பட்ட ஒரு கோட்டினூல். (தற்போதைய எல்லையின் பகுதி).

கிழக்கு : கெஸ்பாவ வீதி புகையிரதக் கடவையிலிருந்து நேர் வடக்காக, மேலே விவரிக்கப்பட்ட வட எல்லையைச் சந்திக்கும் வரை வரையப்பட்ட ஒருகோட்டினூலும் புகையிரத பாதையிலிருந்து நேர் தெற்காக ஸ்ரான்லிதிலகரத்தின மாவத்தை ஓரமாக புகையிரத நிலைய ஒழுங்கையைச் சந்திக்கும் வரை வரையப்பட்ட ஒரு கோட்டினூலும், புகையிரத நிலைய ஒழுங்கையிலிருந்து நேர் தெற்காக ஸ்ரான்லிதிலகரத்தின மாவத்தைக்கு 3 சங்கிலி தூரத்திலும் அதற்குச்சமாந்தரமாகவும், தற்போதைய கோட்டை நகர சபையின் வட எல்லையைச் சந்திக்கும் வரை வரையப்பட்ட ஒரு கோட்டினூலும் ;

தெற்கு : ஸ்ரான்லிதிலகரத்தின மாவத்தையின் மத்திய கோட்டிலிருந்து நேர் கிழக்காகவும் மேற்காகவும் தற்போதைய நகரசபையின் தெற்கெல்லையோரமாக மேலே விவரிக்கப்பட்டுள்ள கிழக்கு மேற்கு ஆகிய எல்லைகளைச் சந்திக்கும் வரை வரையப்பட்ட கோட்டினூலும் பிரதான கோட்டை நுகேகொடை அரசாங்கக் கட்டு வேலைத்திணைக்கள வீதி (ஸ்ரான்லிதிலகரத்தின மாவத்தை) யிலுள்ள புகையிரதக்கடவையிலிருந்து கெஸ்பாவ வீதியிலுள்ள புகையிரதக் கடவை வரை புகையிரதப் பாதையினூலும்.

12–728—31.12.76 ந் திகதிய வர்த்தமானி இல. 2.6

கெக்கிராவைப் பட்டினசபை

பட்டினசபைகள் கட்டளைச் சட்டம்

(256 ம் அத்தியாயமான) பட்டினசபைகள் கட்டளைச்சட்டத்தின் 129 (ஆ), 152 ஆகிய பிரிவுகளின்கீழ் கெக்கிராவைப் பட்டினசபையின் விசேட ஆணையாளரால் ஆக்கப்பட்டதும், அக்கட்டளைச்சட்டத்தின் 153 ம் பிரிவினுல் தமக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக்கொண்டு உள்ளூராட்சி அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டதுமான துணைவிதி.

சீ. ஈ. எச். அமரசேகர,
செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு,

1976-12-03.

துணைவிதி

(256 ம் அத்தியாயமான) பட்டினசபைகள் கட்டளைச்சட்டத்தின் 129 (ஆ) ம் பிரிவின்கீழ் விதித்து அறிவிக்கப்படுவதும் 1976.01.02 ந் திகதிய 197 ம் இலக்க கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளதுமான 1976 ம் ஆண்டுக்கான விசேட மலசுடவரியினின்றும் இதனுடனுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள மனைத்தலங்கள் விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

அட்டவணை

பின்வரும் மதிப்பீட்டிலக்கங்களை கொண்ட மனைத்தலங்கள் :—

1 ம் வட்டாரம்—ஒழுக்கறந்த

ஒழுக்கறந்த வீதி : 5, 7, 11, 15, 19, , 27, 35, 41, 47, 51, 63, 63/10, 85, 91, 10, 18, 22, 30, 44, 52, 68, 72, 26, 57.
மானகடவல வீதி : 23, 37, 39, 20, 28.

புகையிரத நிலைய அவனியூ : 8/2, 8/6, 8/10, 8/16, 8/24, 8/27, 8/28, 12, 24/3, 24/4, 24/5, 32, 36/3,

புகையிரத நிலைய வீதி : 19, 21, 23, 27/6, 27/1, 27/4.

2 ம் வட்டாரம் மலவ

தலாவ வீதி : 7, 9, 11, 15, 19, 21, 31, 33, 35, 95.

4 ம் வட்டாரம் குடாகெக்கிராவ

பண்டியன்சிலை மாவத்தை : 29, 31, 33, 35, 41, 43, 45, 53,57 40, 46, 54, 54/3, 58.

கபுணு மாவத்தை : 11, 15, 21, 8, 14, 20, 26, 26/1, 26/3, 26/5.

மானகடவல ஒழுங்கை : 15, 10/4.

பாசரும் மாவத்தை : 5/1, 5/2, 11, 15, 19, 25, 29, 33, 33/1, 37, 41, 45, 49, 53.

கபரணை வீதி : 47/7, 47/10, 47/16, 47/15, 47/20, 47/21, 47/17.

12-759—31.12.76 ந் திகதிய வர்த்தமானி இல. 246

ச. வ. பீ-14/52

மாநகரசபைகள் கட்டளைச்சட்டம்

(252 ஆம் அத்தியாயமான) மாநகரசபைகள் கட்டளைச்சட்டத்தின் 267 ஆம், 272 ஆம் பிரிவுகளின்கீழ் இரத்தினபுரி மாநகரசபையினுல் ஆக்கப்பட்டவையும், அக்கட்டளைச் சட்டத்தின் 268 ஆம் பிரிவின்கீழ் உள்ளூராட்சி அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டவையும், தேசிய அரசுப் பேரவையினுல்உறுதிப்படுத்தப்பட்டவையுமான துணைவிதிகள்.

மேலதிக செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு, 1976.

இரத்தினபுரி பொது நூல் நிலையம் சம்பந்தமான துணைவிதிகள்

1. இத்துணைவிதிகளில் சந்தர்ப்பம் வேறு வகையாகத் தேவைப்படுத்தினலன்றி "நூல் நிலையப் பொறுப்பாளர்" எனனும் சொல் வைமைப்பு நூல் நிலையத்துக்குப் பொறுப்பாக இருப்பதற்கென உள்ளூராட்சிச் சேவைத் திணைக்களத்தினுல் நியமிக்கப்படும் ஆள் எனப் பொருள்படும். "நூல் நிலைய உதவியாளர்" என்பது நூல் நிலையப் பொறுப்பாளரின் உதவியாளர் ஒருவர் எனப் பொருள்படும்.

2. இரத்தினபுரி மாநகரசபையினுல் தாபிக்கப்பட்டு பேணப்படும் இரத்தினபுரிப் பொது நூல் நிலையம்—

(அ) புத்தகம் கடனுகக் கொடுக்கும் நூல் நிலையம் ஒன்றையும் ;

(ஆ) உசாத் துணை நூல் நிலையம் ஒன்றையும் ;

(இ) வாசிகசாலை ஒன்றையும் ;

(ஈ) சிறுர் நூல் நிலையம் ஒன்றையும் ; அத்துடன்

(உ) இளை நூல் நிலையம் ஒன்றையும்,

கொண்டிருத்தல் வேண்டும்.

3. (1) பொது நூல் நிலையத்தின் பொது நிர்வாகம் சபையினுல் தெரிவு செய்யப்படக்கூடியவாருன அல்லது பெயர் குறித்து நியமனஞ் செய்யப்படக்கூடியவாருன நான்குக்கு மேற்படாத சபை உறுப்பினர்களைக் கொண்ட (இதனகத்துப் பின்னர் "நிலையான குழு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) நூல் நிலைய நிலையான குழுவுக்கு உரித்தாக்கப்படல் வேண்டும்.

(2) பொது நூல் நிலையத்துக்குப் பொறுப்பாகவுள்ள நூல் நிலையப் பொறுப்பாளர் நூல் நிலையத்தில் ஒழுங்கை நிலைநாட்டுவதற்குப் பொறுப்பாக இருத்தல் வேண்டுமென்பதுடன் நூல் நிலைய நிலையான குழுவின் பதவி வழியான செயலாளராகக் கடமையாற்றுதலும் வேண்டும். (1) ஆம் பந்தியின் கீழ் தெரிவு செய்யப்படும் அல்லது பெயர் குறித்து நியமிக்கப்படும் உறுப்பினர்கள் தேர்தல் தேதியிலிருந்து அல்லது நியமனத் தேதியிலிருந்து ஒரு வருட காலத்துக்கு மட்டுமே பதவி வகித்தல் வேண்டுமமெனபதுடன் அவர்கள் மீளத் தெரிவு செய்யப்படுவதற்கு தகுதியுடையவர்களாதலும் வேண்டும்.

4. நிலையான குழுவானது அவசியமென அது கருதக்கூடியவாருன அத்தகைய நிபந்தனைகளுக்கமைய பொது நூல் நிலைய வளவின் எப்பகுதியையும் உபயோகிப்பதற்காக எவரேனும் ஆளை அனுமதிப்பதற்கு அல்லது இத்துணைவிதிகளை எதனையும் அத்தகைய ஆள மீறியிருக்கும் பட்சத்தில் அந்த வளவின் எப்பகுதியையும் அத்தகைய ஆள உபயோகிப்பதை மறுப்பதற்கு அதிகாரமுடையதாயிருத்தல் வேண்டும்.

புத்தகம் கடனுகக் கொடுக்கும் நூல் நிலையம்

5. (1) ஆள் எவரும்—

(அ) அவர் 14 வயதுக்குக் குறையாதவராகவும் ;

(ஆ) எழுத வாசிக்கத் தெரிந்தவராகவும் ;

(இ) மாநகரசபை எல்லைகளுக்குள் ஐம்பது ரூபாவு (ரூபா 50/-) க்கு குறையாத மாதாந்த வாடகைப்பணம் ஈட்டும் வீடொன்றில் குடியிருப்பாளர் அல்லது சொந்தக்காரர் ஒருவரினுல் உத்தரவாதமளிக்கப்பட்டவராகவும் இருந்தாலன்றி, புத்தகம் கடனுகக் கொடுக்கும் நூல் நிலையத்தில் உறுப்பினர் ஒருவராக அனுமதிக்கப்படுதல் ஆகாது.

(2) சபையின் நிர்வாக எல்லைகளுக்குள் வசிக்கும் அல்லது அலுவலகமொன்றை அல்லது வியாபாரத்தலமொன்றை வைத்திருக்கும் ஆளொருவர் நூல் நிலையப் பொறுப்பாளருக்கு ஐந்து ரூபாவிலான பணத்தொகையொன்றைச் செலுத்துவதன் மேல் புத்தகம் கடனுகக் கொடுக்கும் நூல் நிலையத்தின் உறுப்பினராக அனுமதிக்கப்படலாம். மாநகர சபையின் நிர்வாக எல்லைகளுக்கு வெளியே வசிக்கும் ஆளொருவர்—

(அ) நூல் நிலையப் பொறுப்பாளருக்கு ஐந்து ரூபாவிலான பணத்தொகையொன்றைச் செலுத்துவதன் மேலும் ; அத்துடன்

(ஆ) ஒவ்வொரு மாதமும் ஐந்தாம் நாளுக்கு முன்னர் ஒரு ரூபாவிலான மாதாந்தச் சந்தாப்பணத்தைச் செலுத்துவதன் மேலும் ஓர் உறுப்பினராகச் சேர்ந்து கொள்ளலாம்.

(3) புத்தகம் கடனுகக் கொடுக்கும் நூல் நிலையத்தின் ஓர் உறுப்பினராக அனுமதி பெறவிரும்பும் ஒவ்வொரு ஆளும் 50 சதங்களைக் கொண்ட தொகையொன்றினைச் செலுத்துவதன் மேல் நூல் நிலையப் பொறுப்பாளரிடமிருந்து பெறக்கூடிய படிவமொன்றில் அதன் சார்பின் விண்ணப்பித்தல் வேண்டும்.

(4) உறுப்பினரால் உறப்படும் எல்லாக் குற்றப்பணங்களுக்கும், புத்தகங்களையும் வாசிப்புப் பொருட்களையும் இழத்தலுக்கும் உத்தரவாதமளித்தவரே பொறுப்பாதல் வேண்டும்.

6. புத்தகம் கடனுகக் கொடுக்கும் நூல் நிலையத்தின் உறுப்பினராக அனுமதிக்கப்பட்டிருக்கும் ஒவ்வொரு ஆளுக்கும் நூல் நிலையப் பொறுப்பாளர் இரண்டு சீட்டுகளை வழங்குதல் வேண்டுமென்பதுடன் புத்தகங்கள் கடனுக வாங்கப்படும்போதெல்லாம் அவை நூல் நிலையத்தில் விடப்பட்டிருத்தலும் வேண்டும். அத்தகைய சீட்டு ஒவ்வொன்றின் மீதும் ஒரு புத்தகத்தைக் கடனுக வாங்குவதற்கு ஓர் உறுப்பினர் உரித்துடையவராதல் வேண்டும்.

7. புத்தகம் கடனுகக் கொடுக்கும் நூல் நிலையத்தின் உறுப்பினரொருவர், தமக்கு வழங்கப்பட்ட சீட்டின் மீது அத்தகைய நூல் நிலையத்திலிருந்து எடுத்துச் செல்லப்படும் எந்தப் புத்தகத்துக்கும் பொறுப்பாளியாவார்.

8. புத்தகம் கடனுகக் கொடுக்கும் நூல் நிலையத்தின் உறுப்பினரொருவர் 6 ஆம் துணைவிதியின்கீழ் தமக்கு வழங்கப்பட்ட சீட்டை இழக்குமிடத்து, அத்தகைய இழப்புப்பற்றி அவர் உடனடியாக நூல் நிலையப் பொறுப்பாளருக்கு அறிவிக்கவேண்டும். அத்தகைய சீட்டின் மீது புத்தகம் கடனுகக் கொடுக்கும் நூல் நிலையத்திலிருந்து புத்தகம் எதுவும் கடனுக வாங்கப்படவில்லையென்று நூல் நிலையப் பொறுப்பாளர் திருப்திப்படும் பட்சத்தில், அத்தகைய ஒவ்வொரு சீட்டின் மீதும் ஐம்பது சதம் செலுத்தப்படுவதன் மேல், அவர் இந்த உறுப்பினருக்கு இணைப்படிச் சீட்டொன்றை வழங்கலாம். இழப்புப்பற்றி அவருக்குத் தெரிவிக்கப்பட்ட திகதியிலிருந்து குறைந்தபட்சம் முப்பது தினங்கள் செல்லும்வரை அவ்வாறான இணைப்படிச் சீட்டு எதுவும் நூல் நிலையப் பொறுப்பாளரினுல் வழங்கப்படுதல் ஆகாது, ஆனல் இணைப்படிச் சீட்டொன்றை வழங்குவதன் மூலம் புத்தகம் கடனுக எடுப்பவர் தமது மூலச் சீட்டுடன் எச்சமயத்திலும் எடுத்துச் சென்ற புத்தகங்களுக்கான அவரது பொறுப்பிலிருந்து விடுவிக்கப்படுதல் ஆகாது.

9. புத்தகம் கடனுக எடுப்பவரின் வசிப்பிடத்தின் அல்லது வேலை செய்யும் இடத்தின் மாற்றமெதுவும், அத்தகைய மாற்றம் இடம்பெற்ற ஒரு வார காலத்துக்குள் நூல் நிலையப் பொறுப்பாளருக்கு எழுத்துமூலம் தெரிவிக்கப்படுதல் வேண்டும். அப்படி தெரிவிக்காவிடின் கட்டுப்பணம், சீட்டுகள் ஆகியவற்றை இழக்கும் தண்டனைக்குட்படல் வேண்டும். சீட்டுகளைத் திருப்பி வழங்குதல் நூல் நிலையப் பொறுப்பாளரின் தற்றுணிபில் இருத்தல் வேண்டும்.

10. மாநகர பிரதேசத்துக்குள் வசிக்காதொழியும் அல்லது நூல் நிலையத்தை உபயோகிக்காதொழியும் எவரேனும் உறுப்பினர் தனது சீட்டுக்களை இரத்து செய்யும் பொருட்டு அவற்றை நூல் நிலையத்துக்குத் திருப்பிக் கொடுத்துவிடுதல் வேண்டும். அல்லாவிடின் அத்தகைய உறுப்பினர் அவரது சீட்டுக்களின்மீது எடுத்துச் செல்லப்படும் எப்புத்தகத்துக்கும் பொறுப்பாளிகளாகவிருத்தல் வேண்டும்.

11. உறுப்பாண்மையானது 5 (1) (இ) என்னும் துணைவிதியின் நியதிகளுக்கு இணங்க உத்தரவாதம் ஒன்றுடன் சேர்த்து விண்ணப்பமொன்றைச் செய்வதன் மூலம் ஒவ்வொரு ஆண்டும் புதுப்பிக்கப்படுதல் வேண்டும். அத்தகைய புதுப்பித்தலுக்குக் கட்டணம் எதுவும் செலுத்தப்பட வேண்டியதில்லை.

12. (1) புத்தகம் கடனுகக் கொடுக்கும் நூல் நிலையத்திலிருந்து உறுப்பினரொருவரால் கடனுக எடுக்கப்பட்ட புத்தகம் எதுவும், அது வழங்கப்பட்ட திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் நூல் நிலையப் பொறுப்பாளரிடம் திருப்பிக் கொடுக்கப்படுதல் வேண்டும்.

(2) வேறு எவரேனும் கடன் எடுப்பவரால் வேண்டப்படாத எப்புத்தகமும், மேலும் 14 நாட்களுக்குப் புதுப்பிக்கப்படலாம். நூல் நிலையத்தில் புத்தகங்களை நேரடியாகச் சமர்ப்பிப்பதன் மூலம் அல்லது நூல் நிலையப் பொறுப்பாளருக்கு முகவரியிட்ட கடிதம் ஒன்றின் மூலம் புத்தகங்கள் அவ்வாறு புதுப்பிக்கப்படலாம்.

13. உறுப்பினரொருவர் புத்தகம் கடனுகக் கொடுக்கும் நூல் நிலையத்திலிருந்து தாம் கடனுக எடுத்த புத்தகம் எதையும் 12 ஆம் துணைவிதியில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள 14 நாட்களுக்குள் திருப்பிக் கொடுக்கத் தவறுமிடத்து, உரிய திகதிக்குப் பின்னர் வைத்திருக்கப்படும் ஒவ்வொரு புத்தகத்துக்கும் அத்தகைய புத்தகம் கொடுக்குமதியான நாளொன்றுக்கு 10 சதம் குற்றப்பணமாக அறவிடப்படும். ஞாயிற்றுக் கிழமைகளும் அரசாங்க விடுமுறைத் தினங்களும் இந்நோக்கத்துக்கு கணக்கிலெடுக்கப்படுதல் ஆகாது.

14. உறுப்பினரொருவர் புத்தகம் கடனுகக் கொடுக்கும் நூல் நிலையத்திலிருந்து தாம் கடனுக எடுத்த புத்தகம் எதையும், அப்புத்தகம் கடனுக எடுக்கப்பட்ட திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் திருப்பிக் கொடுக்கத் தவறுமிடத்து, அவ்வாறு கடனுக எடுத்தவரிடமிருந்து அல்லது உத்தரவாதமளித்தவரிடமிருந்து வழக்குச் செலவுகளுடன் அத்தகைய புத்தகத்தின் பெறுமதியை அல்லது சபையின் விருப்புரிமையின் பேரில் அதன் பெறுமதியின் இரண்டு மடங்கான தொகையையும், உறையிடுக்கட்டிய செலவையும், 13 ஆம் துணைவிதியின் நியதிகளின்படி உரிய காலத்தில் திருப்பிக் கொடுக்கப்படாத புத்தகத்திற்கான தாமதக் கட்டணங்களையும் அறவிடுவதற்கு சட்டரீதியான நடவடிக்கைகள் எடுப்பதற்கு சபை உரிமை உடையதாய் இருத்தல் வேண்டும்.

15. உறுப்பினர் எவரும் புத்தகம் கடனுகக் கொடுக்கும் நூல் நிலையத்திலிருந்து தாம் இரவல் எடுத்த எப்புத்தகத்துக்கும் சேதம் அல்லது பழுது விளைவித்தல் ஆகாது. உறுப்பினர்கள் புத்தகங்களைச் சுத்தமாக வைத்திருத்தல் வேண்டும். அவர்கள் புத்தகத்திலுள்ள இதழ்களை மடித்தலோ அவற்றில் பென்சில் அடையாளம் அல்லது வேறு அடையாளங்கள் இடுதலோ ஆகாது.

16. புத்தகம் கடனுகக் கொடுக்கும் நூல் நிலையத்திலிருந்து தாம் கடனுக எடுக்கக் கருதும் எப்புத்தகத்திலும் காணப்படும் சேதம் அல்லது பழுது எதுவும்பற்றி நூல் நிலையப் பொறுப்பாளரின் கவனத்துக்குக் கொண்டுவரவேண்டியது உறுப்பினர் ஒவ்வொருவரினதும் கடமையாதல் வேண்டும். அத்தகைய சேதம் அல்லது பழுது எதையும் பற்றி நூல் நிலையப் பொறுப்பாளரின் கவனத்துக்குக் கொண்டுவர அவர் தவறுமிடத்து, அத்தகைய புத்தகம் அத்தகைய சேதம் அல்லது பழுது எதுவுமின்றி அவரிடம் கொடுக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

17. உறுப்பினரொருவரால் திருப்பிக் கொடுக்கப்பட்ட ஏதேனும் புத்தகம் (நியாயமான பாவனையால் ஏற்படுவதைத் தவிர) அழுக்காக்கப்பட்டுள்ளதென, எழுதப்பட்டுள்ளதென, அடையாளமிடப்பட்டுள்ளதென, அல்லது வேறு வகையில் பழுதுபடுத்தப்பட்டுள்ளதென நூல் நிலையப் பொறுப்பாளர் திருப்திப்படுமிடத்து, அவர் அப்புத்தகத்தின் பெறுமதியை உறுப்பினரிடமிருந்து அறவிடலாம். அத்தகைய பணத்தைச் செலுத்த உறுப்பினர் தவறுமிடத்து அத்தகைய தொகையைச் செலவு தொகையுடன் சேர்த்து அறவிடச் சபை சட்டமுறையான நடவடிக்கையைத் தொடரலாம். உறுப்பினரொருவர் புத்தகமொன்றை புதிய புத்தகமொன்றினைக் கொடுப்பதன் மூலம் மாற்றீடு செய்யுமிடத்து அல்லது அதன் பெறுமதியைத் திருப்பிக் கொடுக்குமிடத்து, அப்புத்தகம் "இரத்தினபுரி பொது நூல் நிலையம்—பழுதாகி விற்கப்பட்டது" என்று முத்திரையிடப்பட்ட பின்னர் பழுதான பிரதியாக அவர் அதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

18. (அ) உறுப்பினர் எவரும் புத்தகம் கடனுகக் கொடுக்கும் நூல் நிலையத்திலிருந்து தாம் கடனுக எடுத்த புத்தகமெதையும் ஆள் எவருக்கும் கடனுகக் கொடுத்தல் ஆகாது.

(ஆ) இத்துணைவிதியின் (அ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளை மீறும் உறுப்பினர் எவரும் புத்தகம் கடனுகக் கொடுக்கும் நூல் நிலையத்தின் உறுப்பினரொருவராக இல்லாதொழிதல் வேண்டும்.

19. (அ) உறுப்பினர் எவரும் தமது அறிவுக்குத் தெரிந்தவரை தொற்று நோயால் அல்லது தொடு நோயால் அல்லது சரும நோயால் பீடிக்கப்பட்டுள்ள எவரேனும் ஆளினுல் உபயோகிக்கப்பட்டுள்ள புத்தகம் எதனையும் புத்தகம் கடனுகக் கொடுக்கும் நூல் நிலையத்திற்குத் திருப்பிக் கொடுத்தல் ஆகாது.

(ஆ) புத்தகம் கடனுகக் கொடுக்கும் நூல் நிலையத்திலிருந்து உறுப்பினர் ஒருவரால் கடனுக எடுக்கப்பட்ட ஒரு புத்தகம் தொற்று நோய் அல்லது தொடு நோய் அல்லது சரும நோய் எதனுலும் பீடிக்கப்பட்டுள்ள எவரேனும் ஆளினுல் உபயோகிக்கப்பட்டுள்ளவிடத்து அத்தகைய புத்தகம் அழிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் அந்த உறுப்பினர் அதனைப் பதிலீடு செய்வதற்கான செலவை நூல் நிலையப் பொறுப்பாளருக்குச் செலுத்தலும் வேண்டும்.

20. ஒரு குறிப்பிட்ட புத்தகத்தை எந்த உறுப்பினர் கடனுக எடுக்க வேண்டுமென்பது பற்றி புத்தகம் கடனுகக் கொடுக்கும் நூல் நிலையத்தின் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட உறுப்பினர்களிடையே பிணக்கு ஏதேனும் ஏற்படுமிடத்து நூல் நிலையப் பொறுப்பாளரின் முடிவே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

21. வேறொரு உறுப்பினரால் ஏற்கனவே கடனுக எடுக்கப்பட்டுள்ள புத்தகம் எதையும் கடனுக எடுக்க விரும்பும் உறுப்பினர் எவரும் அந்த நோக்கத்துக்காக வைக்கப்பட்டிருக்கும் பதிவேட்டில் தமது பெயரையும் புத்தகத்தின் தலைப்பையும் பதிதல் வேண்டும். அத்தகைய புத்தகம் கடனுக எடுத்த உறுப்பினரால் திருப்பிக் கொடுக்கப்பட்டவுடன் நூல் நிலையப் பொறுப்பாளர் பதிவேட்டில் தமது பெயரைப் பதிந்து வைத்திருக்கும் உறுப்பினருக்கு அதனைக் கொடுத்தல் வேண்டும். இரண்டு அல்லது அதற்குக் கூடுதலான உறுப்பினர்கள் எந்த ஒரு புத்தகத்துக்காகவும் தங்கள் பெயர்களைப் பதிவேட்டில் பதிந்து இருக்கும் இடத்து, அத்தகைய புத்தகம் தனது பதிவேட்டில் தங்கள் பெயர்களை அவர்கள் எந்த வரிசைக் கிரமப்படி பதிந்துள்ளார்களோ அவர்களுக்கு அந்த வரிசைக் கிரமப்படி கொடுக்கப்படுதல் வேண்டும்.

22. நூல் நிலையத்தின் ஒவ்வொரு கிளையும் திறக்கப்படும் நேரமும் மூடப்படும் நேரமும் நிலையான குழுவினுல் காலத்திற்குக் காலம் யோசனை கூறப்படுகின்றவாறு மாற்றப்படல் வேண்டும்.

**உசாத்துணை நூல் நிலையம்**

23. (1) ஆள் எவரும்—

(அ) அந்த நோக்கத்துக்காக நூல் நிலையப் பொறுப்பாளரிடமிருந்து அனுமதி கிடைக்கப்பெற்றும், அத்துடன்

(ஆ) உசாத்துணை நூல் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ள பதிவேட்டில் கையொப்பமிட்டும் இருந்தாலன்றி உசாத்துணை நூல் நிலையத்தை பயன்படுத்தல் ஆகாது.

(2) நூல் நிலையப் பொறுப்பாளர்—

(அ) எழுத, வாசிக்க தெரிந்தவரும் ;

(ஆ) மாநகரப் பிரதேசத்துக்குள் வசிப்பவரும் ; அத்துடன்

(இ) பதினன்கு வயதுக்குட்படாதவருமான

எவரேனும் ஆளை உசாத்துணை நூல் நிலையத்தை உபயோகிப்பதற்கு அனுமதிக்கலாம்.

24. ஆதாரங்காணும் நோக்கத்துக்காக தமக்குக் கொடுக்கப்பட்ட புத்தகமெதையும் அல்லது நூலகத்தில் திரட்டி வைக்கப்பட்டிருக்கும் தொகுப்பின் ஒரு பாகமாக அமைந்துள்ள வேறு புத்தகமெதையும் அல்லது அதன் பகுதியை அல்லது துண்டுப் பிரசுரம், பருவ வெளியீடு, படம், ஓவியம், செதுக்கும் வேலைப்பாடு, உலகப்படம், விளக்கப்படம், மாதிரிப்படம், கையெழுத்துப் பிரதி, ஆவணம், அச்சுப் பிரதி, அல்லது புதினத்தாள் எதனையும் ஆள் எவரும் மாநகர முதல்வரின் அல்லது மாநகர ஆணையாளரின் முன் அங்கீகாரத்துடனன்றி உசாத்துணை நூல் நிலையத்திலிருந்து வெளியே கொண்டு செல்லல் ஆகாது.

### வாசிகசாலை

25. ஆள் எவரும்—

(அ) நூல் நிலையப் பொறுப்பாளரிடமிருந்து அந்நோக்கத்துக்காக அனுமதி கிடைக்கப்பெற்றிருந்தாலன்றியும், அத்துடன்

(ஆ) வாசிகசாலையில் வைக்கப்பட்டிருக்கும் பதிவேட்டில் ஒப்பமிட்டிருந்தாலன்றியும்

வாசிகசாலையைப் பயன்படுத்தல் ஆகாது.

26. வாசிகசாலையில் வைக்கப்பட்டுள்ள அல்லது வாசிகசாலைக்கு அல்லது நூல் நிலையத்துக்குச் சொந்தமான புதினப் பத்திரிகை, பருவ வெளியீடு, சஞ்சிகை, உலகப்படம், ஆவணம், கையெழுத்துப் பிரதி, அச்சுப் பிரதி, விளக்கப்படம், ஓவியம், படம், செதுக்கும் வேலைப்பாடு, துண்டுப் பிரசுரம் அல்லது வேறு எப்பொருளையும் வாசிகசாலையிலிருந்து அகற்றலாகாது.

### சிறுர் நூல் நிலையம்

27. மாநகர சபையின் நிருவாக எல்லைகளுக்குள் வசிக்கும் அல்லது அங்குள்ள பாடசாலையொன்றுக்குச் செல்லும் பிள்ளைகள் சிறுர் நூல் நிலையத்தின் உறுப்பினர்களாக அனுமதிக்கப்படுவதற்குத் தகுதியுடையவர்களாவர்.

28. எப்பிள்ளையும்—

(அ) 6 வயதுக்குக் குறையாமலும், 14 வயதுக்கு மேற்படாமலும்,

(ஆ) எழுது வாசிக்கத் தெரிந்தும்,

இருந்தாலன்றி சிறுர் நூல் நிலையத்தின் ஓர் உறுப்பினராக அனுமதிக்கப்படுதல் ஆகாது.

29. சிறுர் நூல் நிலையத்தின் ஓர் உறுப்பினராக அனுமதிபெற விரும்பும் ஒவ்வொரு பிள்ளையும் பின்வரும் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும் :—

(அ) 2 ரூபா 50 சதங்களைக் கொண்ட தொகையொன்று வைப்புப் பணமாக நூல் நிலையப் பொறுப்பாளருக்குச் செலுத்தப்படல் வேண்டும் ;

(ஆ) பாடசாலை செல்லும் பிள்ளைகள் தமது விண்ணப்பங்களில் பாடசாலை அதிபதியினல் புறக்குறிப்பிடப்படச் செய்தல் வேண்டும்.

30. சிறுர் நூல் நிலையத்தின் ஓர் உறுப்பினராக அனுமதிக்கப்பட்டிருக்கும் ஆள் ஒருவருக்கு இரண்டு சீட்டுக்கள் வழங்கப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய சீட்டுக்கள் இரண்டு புத்தகங்களை ஒரே தடவையில் கடளுக எடுப்பதற்கு அவரை உரித்துடையவராக்குதலும் வேண்டும், புத்தகங்கள் கடளுக எடுக்கப்படும் போதெல்லாம் அச்சீட்டுக்களை நூல் நிலையத்தில் விட்டுவிட்டுச் செல்லுதல் வேண்டும்.

31. உறுப்பினர்கள் தமது சீட்டுக்களை இழந்துவிடாதிருக்குமாறு எச்சரிக்கப்படுகிறுர்கள். ஏனெனில் அத்தகைய சீட்டுக்களுடன் எடுத்துச் செல்லப்பட்ட எல்லாப் புத்தகங்களுக்கும் அவர்களே பொறுப்பாளிகளாக இருத்தல் வேண்டும்.

32. உறுப்பினரால் உறப்படும் குற்றப்பணங்களுக்கும், புத்தகங்கள், வாசிணைப் பத்திரங்கள் வேறு பொருட்கள் ஆகியவற்றினுல் ஏற்படும் இழப்புகளுக்கும் சேதங்களுக்கும் உத்தரவாதமளிப்பவரே பொறுப்பாளியாதல் வேண்டும்.

33. சிறுர் நூல் நிலையத்தின் உறுப்பினரொருவர் 30 ம் துணைவிதியின்கீழ் தமக்கு வழங்கப்பட்ட சீட்டை இழக்குமிடத்து, அத்தகைய இழப்பு பற்றி அவர் உடனடியாக நூல் நிலையப் பொறுப்பாளருக்கு அறிவித்தல் வேண்டும். அத்தகைய சீட்டின் பேரில் சிறுர் நூல் நிலையத்திலிருந்து புத்தகம் எதுவும் கடளுக வாங்கப்படவில்லையென்று நூல் நிலையப் பொறுப்பாளர் திருப்திப்படுவாராயின் 25 சதங்கள் செலுத்தப்படுவதன் பேரில் அவர் அத்தகைய உறுப்பினருக்கு இணைப்படிச் சீட்டொன்றினை வழங்கலாம். இழப்புப் பற்றி அவருக்குத் தெரிவிக்கப்பட்ட திகதியிலிருந்து குறைந்தது 30 தினங்கள் முடியும் வரை அவ்வாறான இணைப்படிச் சீட்டு எதுவும் நூல் நிலையப் பொறுப்பாளரினுல் வழங்கப்படுதல் ஆகாது. ஆனல் இணைப்படிச் சீட்டொன்றை வழங்குவது, கடளுக எடுப்பவர் தமது மூலச் சீட்டுடன் எச்சமயத்திலும் எடுத்துச் செல்லும் புத்தகங்களுக்கான அவரது பொறுப்பை விடுவித்தல் ஆகாது.

34. உறுப்பினரொருவர் சிறுர் நூல் நிலையத்திலிருந்து தாம் கடளுக எடுத்த புத்தகம் எதையும் 12 ஆம் துணைவிதியில் குறிப்பிடு செய்யப்பட்டுள்ள பதினன்கு நாட்களுக்குள் திருப்பிக் கொடுக்கத் தவறுமிடத்து ஒவ்வொரு புத்தகத்துக்கும் உரிய திகதிக்குப் பின்னர் வைத்திருக்கும் நாளொவ்வொன்றுக்கும் 5 சதங்கள் விகிதம் குற்றப் பணம் அறவிடப்படுதல் வேண்டும். இந்நோக்கத்துக்கு ஞாயிற்றுக் கிழமைகளும் அரசாங்க விடுமுறைத் தினங்களும் கணக்கிடப்படமாட்டா.

35. உறுப்பினரொருவர் சிறுர் நூல் நிலையத்திலிருந்து தாம் கடளுக புத்தகம் எதையும் அது கடளுக எடுக்கப்பட்ட திகதியிலிருந்து 30 தினங்களுக்குள் திருப்பிக் கொடுக்கத் தவறுமிடத்து, சபை சட்டரீதியான நடவடிக்கை மூலம் கடன் எடுத்தவரிடமிருந்து, பெற்றுரிடமிருந்து அல்லது உத்தரவாதமளித்தவரிடமிருந்து வழங்குச் செலவுகளுடன் புத்தகத்தின் பெறுமதியை அல்லது சபையின் விதப்புரிமையின் பேரில் அதன் பெறுமதியின் இரண்டு மடங்கான தொகையையும் உறையிட்டுக் கூடிய செலவையும் 34 ஆம் துணைவிதியின் நியதிகளின்படி உரிய காலத்தில் திருப்பிக் கொடுக்கப்படாத புத்தகத்திற்கான தாமதக் கட்டணங்களையும் அறவிடுதற்கான நடவடிக்கைகள் எடுப்பதற்கு சபை உரித்துடையதாதல் வேண்டும்.

36. 11, 15, 16, 18, 19, 21, 22, ஆகிய துணைவிதிகள் சிறுர் நூல் நிலையத்திற்கும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

### பொது

37. தொடு நோய், தொற்று நோய் அல்லது சரும நோய் எதனேனும் துன்புறும் அல்லது சமீப காலத்தில் துன்புற்ற ஆள் எவரேனும் அல்லது அத்தகைய நோயுறுக துன்புறும் எவருக்கும் சமீப காலத்தில் பணிவிடை செய்த ஆள் எவரேனும் நோய் தொற்றுங்காலவேளையும், காத்தற்காலவேளையும் கழியுமவரை பொது நூல் நிலைய வளவினுள் பிரவேசித்தலாகாது.

38. ஆள் எவரும்—

(i) பொது நூல் நிலைய வளவினுள்ளோ அல்லது அதன் சமீபத்திலோ ஒழுங்கீனமானமுறையில் நடந்துகொள்ளுதல் அல்லது வேறேனும் தொந்தரவு உண்டுபண்ணுதல் ஆகாது;

(ii) பொது நூல் நிலையக் கட்டடத்தின் எப்பாகத்தையும் அல்லது அதனுள்ள அல்லது அதன் சமீபத்திலுள்ள சபையின ஆதனங்களில் எதையும் சேதப்படுத்தல் அல்லது வேறு வகையில் உருவழித்தல் ஆகாது ;

(iii) தம்மைப் பற்றி திருப்தியான விபரம் தரவியலாது, பொது நூல் நிலையம் மூடப்பட்ட பின்னர் அத்தகைய நூல் நிலைய வளவினுள் பிரவேசித்தல் அங்கு தங்கியிருத்தல் அல்லது நடமாடுதல் ஆகாது ;

(iv) பொது நூல் நிலைய வளவினுள் புகைபிடித்தல் அல்லது துப்புதல் ஆகாது ;

(v) பொது நூல் நிலைய வளவினுள் தாயக்கட்டைகள் அல்லது சீட்டுகள் கொண்டு சூது விளையாடுதல் அல்லது வேறு விளையாட்டுக்களேதும் விளையாடுதல் ஆகாது ;

(vi) பொது நூல் நிலையத்தினுள்ளிருந்து கூச்சல் போட்டு அல்லது பாட்டுகள் பாடி அல்லது வேறேதும் சத்தஞ் செய்து அந்நூல் நிலையத்தைப் பயன்படுத்துபவர்களைக் குழப்புதல் ஆகாது ;

(vii) தகாத முறையில் உடையுடுத்துக் கொண்டு பொது நூல் நிலைய வளவினுள் பிரவேசித்தல் ஆகாது ;

(viii) பொது நூல் நிலைய வளவினுள் நாய் அல்லது வேறு மிருகமெதனையும் கொண்டு செல்லல் ஆகாது ;

(ix) பொது நூல் நிலைய வளவின் எப்பாகத்திலாயினும் உறங்குதல் அல்லது எவ்வுணவையும் உட்கொள்ளுதல் ஆகாது ;

(x) பொது சனங்களின் பழக்கத்துக்கென ஒதுக்கப்படாத நூல் நிலையத்தின் எப்பாகத்திலும் பிரவேசித்தல் அல்லது தங்கியிருத்தல் ஆகாது ;

(x.) தொப்பிகள், குடைகள், கைத்தடிகள், பைகள், பொதிகள், அல்லது வேறு எப்பொருளையும் பாதுகாப்பாக வைத்திருப்ப தற்குப் பொறுப்பு எதுவும் சாட்டுதல் ஆகாது. அத்தகைய பொருடகள் கடன் பெறுபவரின் அல்லது வாசகரின் சொந் தப் பொறுப்பிலேயே வைத்திருக்கப்படல் வேண்டும் ;

(xii) நூல் நிலையத்திலடங்கியுள்ளவற்றின் ஒரு பாகமாகவுள்ள புத்தகம் அல்லது ஆவணம் எதையும் அல்லது அதிலுள்ள ஆதனம் எதையும் தளபாடங்கள் அல்லது துணைக்கருவிகள் எவற்றையும் வேண்டுமென்றோ அல்லது கவலையீனமாகவோ அல்லது உதாசீனமாகவோ, அழுககாக்குல், கிழித்தல், வெட்டுதல், உருவழித்தல், எழுதுதல், பழுதாககுதல், ஊறு படுத்துதல் அல்லது அழித்தல் ஆகாது ;

(xiii) நூல் நிலையப் பொறுப்பாளர் அல்லது நூல் நிலையப் பொறுப் பாளரின் கட்டளைப்படி கருமமாற்றும் ஆள் எவரும் இத் துணைவிதிகளின்கீழான தமது தத்துவங்களை சட்டபூர்வ மாகப் பிரயோகிப்பதினின்றும் தடை செய்தல் ஆகாது ;

39. நூல் நிலைய வளவினுள்—

(அ) ஒழுங்ககேடான முறையில் நடந்துகொள்ளும் ;

(ஆ) ஆவேசமான, அவதூறான அல்லது ஆபாசமான வார்த்தைகளைப் பேசும் ;

(இ) பந்தயங்கள் கட்டும் அல்லது சூதாடும் அல்லது எச்சரிக்கை செய்யப்பட்ட பின்னரும் நூல் நிலையத்தை மூடுதற்குக் குறிக்கப்பட்டுள்ள நேரங்கடந்து பிடிவாதமாக அங்கு தங்கி நிற்கும் அல்லது நூல் நிலையத்தைப் பயன்படுத்த அருகதை யற்றவராகவிருக்கும், அல்லது தொற்று நோயினால் அல்லது தொடு நோயினால் துன்புறும் ஆள் எவரும் நூல் நிலையத்தை அல்லது சபையைச் சேர்ந்த அலுவலரினால் அல்லது ஊழியர் ஒருவரினால் வெளியேற்றப்படலாம் அல்லது அப்புறப்படுத்தப் படலாம்.

40. இத்துணைவிதிகளின் 26 ஆம் துணைவிதியை, 37 ஆம் துணை விதியை 38 ஆம் துணைவிதியின் i ஆம், ii ஆம், iii ஆம், iv ஆம், v ஆம், vi ஆம், vii ஆம், viii ஆம், ix ஆம், x ஆம், xi ஆம், xii ஆம், அல்லது xiii ஆம் பந்திகளை அல்லது 39 ஆம் துணைவிதியை மீறுஞ் செயல் ஒவ்வொன்றும் ஐம்பது ரூபாவுக்கு மேற்படாத குற்றப் பணமொன்றினால் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

41. 14 ஆம், 15 ஆம், 17 ஆம், 18 ஆம், 24 ஆம், 26 ஆம், 37 ஆம், 38 ஆம், 39 ஆம், துணைவிதியை மீறும் எவரேனும் ஆளின் உறுப்பாண்மையானது மாநகர முதல்வரினால் நீக்கப்படல் வேண்டும் என்பதுடன் அத்தகைய உறுப்பினர் எச்சந்தர்ப்பத்திலும் மீண்டும் புதிய உறுப்பினராகச் சேர்த்துக்கொள்ளப்படுதற்கு உரித்துடையவராகவு மாட்டாரெனவும் வேண்டும்.

42. 1975 ஆம் ஆண்டு யூன் 8 ஆம் தேதிய 63 ஆம் இலக்கக் கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட துணைவிதிகள் இத்தால் நீக்கப்படுகின்றன.

12-760—31.12.76 ந் திகதிய வர்த்தமானி இல. 246

---

# நானாவித அறிவித்தல்கள்

## ஹாலி-எலப் பட்டினசபை

பட்டின சபைகள் கட்டளைச் சட்டம்

**1977 ஆம் ஆண்டுக்கான விசேட மலகூட வரி**

(256 ஆம் அத்தியாயமான) பட்டினசபைகள் கட்டளைச் சட்டத்தின் 129 (ஆ) என்னும் பிரிவின் கீழும் அவருக்குக் கையளிக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு உள்ளூராட்சி ஆணையாளரினாற் கொடுக்கப்பட்ட அங்கீகாரத்துடனும் துணைவிதிகளினால் விதிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வரையறைகளுக்கும் விலக்களிப்புகளுக்கும் அமைவாக ஹாலி-எலப் பட்டினத்துள் அமைந்துள்ள அசைவற்ற ஆதனங்கள் அனைத்தினதும் வருடாந்தப் பெறுமதியின் நூற்றுக்கு 6 (ஆறு) வீதமானதும் முறையே மார்ச்சு 31, யூன் 30, செத்தெம்பர் 30 திசெம்பர் 31 ஆகிய திகதிகளில் நான்கு தவணைகளில் சம தொகை களாகச் செலுத்தப்படற்பாலதுமான ஒரு விசேட மலகூட வரியை 1977 ஆம் ஆண்டுக்கு ஹாலி-எலப் பட்டினசபை விதித்துள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

டபிள்யூ. ஈ. வீ. எஸ். த அல்விஸ்,
உள்ளூராட்சி ஆணையாளர்.

கொழும்பு,
1976.11.15.

12-91—31.12.76 ந் திகதிய வர்த்தமானி இல. 246

---

## விசேட ஆணையாளர் பணிமனை

எட்டியாந்தோட்டைப் பட்டினம்

**பட்டின சபைகள் கட்டளைச் சட்டம்**

1977 ஆம் ஆண்டுக்கான விசேட மலகூட வரி

(256 ஆம் அத்தியாயமான) பட்டினசபைகள் கட்டளைச்சட்டத்தின் 129 (ஆ) என்னும் பிரிவின் கீழும் அவருக்குக் கையளிக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு உள்ளூராட்சி ஆணையாளரினாற் கொடுக்கப்பட்ட அங்கீகாரத்துடனும் துணைவிதிகளினால் விதிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வரையறைகளுக்கும் விலக்களிப்புகளுக்கும் அமைவாக எட்டியாந்தோட்டைப் பட்டினத்தினுள் அமைந்துள்ள அசைவற்ற ஆதனங்கள் அனைத்தினதும் வருடாந்தப் பெறுமதியின் நூற்றுக்கு ஆறு வீதமானதும் முறையே மார்ச்சு 31, யூன் 30, செத்தெம்பர் 30, திசெம்பர் 31 ஆகிய திகதிகளில் நான்கு தவணைகளில் சமதொகைகளாகச் செலுத்தப்படற்பாலதுமான ஒரு விசேட மலகூட வரியை 1977 ஆம் ஆண்டுக்கு எட்டியாந்தோட்டைப் பட்டினத்தின் விசேட ஆணையாளர் விதித்துள்ளாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

டபிள்யூ. ஈ. வீ. எஸ். த அல்விஸ்,
உள்ளூராட்சி ஆணையாளர்.

கொழும்பு,
1976.11.15.

12-92—31.12.76 ந் திகதிய வர்த்தமானி இல. 246

---

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

வரவு செலவுத் திட்டம்—1977

1977 ஆம் ஆண்டிற்குக் கிடைக்கக்கூடிய மாநகர வருமான மதிப் பீட்டையும், உத்தேச செலவின விபரங்களையும் உள்ளடக்கிய யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்தின், வரவு செலவுத் திட்டம் 1976 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 3 ம் திகதி தொடக்கம் ஏழு நாட்களுக்கு யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற அலுவலகத்தில் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்படுமென, மாநகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 252) 212 (பி) பிரிவின் பிரகாரம் இத்தால் அறிவித்தல் தரப்படுகின்றது.

அ. அ. யோசேப்
விசேட ஆணையாளர்,
யாழ். மாநகராட்சி மன்றம்.

மாநகராட்சி மன்ற அலுவலகம்,
யாழ்ப்பாணம், 18.11.76.

12-35—31.12.76 ந் திகதிய வர்த்தமானி இல. 246

### ஏருவூர் பட்டின சபை

1976 ம் வருடத்திற்கான சோலை வரி இடாப்புகள்

மாநகர சபைகள் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 252) 235 (1) ம் பிரிவின்படியும் பட்டின சபைகள் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 256) 165 ம் பிரிவின்படியும் ஏருவூர் பட்டின சபையின் 1976 ம் ஆண்டிற் குரிய சோலை வரி இடாப்புகள் தற்பொழுது தயாராகவுள்ளன என்பதையும் அவற்றை அலுவலக நேரங்களில் பொது மக்கள் பார்வைக்காக பட்டின சபை அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கின்றன என்பதையும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

எம். ஏ. சீ. ஏ. றகுமான்,
தலைவர்,
பட்டின சபை, ஏருவூர்.

பட்டின சபை அலுவலகம்,
ஏருவூர்,
03 02.1976.

12-109—31.12.76 ந் திகதிய வர்த்தமானி இல. 246

---

### வேலணைக் கிராமச்சபை

1952 ஆம் ஆண்டின் 6 ம் இலக்க உள்ளூரதிகாரத் தாபனங்கள் (நியமத் துணை-விதிகள்) கட்டளைச்சட்டம்.

உள்ளூரதிகாரத் தாபனங்கள் (நியமத் துணை–விதிகள்) சட்டத்தின் (அத்தியாயம் 261) 3 ஆம் பிரிவின்கீழ் யாழ்ப்பாண மாவட்டத்து வேலணைக் கிராமப் பிரதேசத்தின் கிராமசபையினால் நிறைவேற்றப்பட்ட கீழ்க்காணும் தீர்மானம் அப்பிரிவின் தாற்பரியப்படி பிரசுரிக்கப்படுகிறது.

#### தீர்மானம்

(261 ஆம் அத்தியாயமான) உள்ளூராட்சிச் சபைகள் (நியமத் துணை–விதிகள்) சட்டத்தின் 3 ஆம பிரிவின் கீழ் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள வேலணைக் கிராமப் பிரதேசத்துக் கிராமச்சபையினால் இத்தீர்மானம் அரசாங்கவர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் திகதியில் இருந்து ஏற்றுக் கொள்ளவதென இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

(அ) உள்ளூராட்சி அமைச்சரால் ஆக்கப்பட்டு 1953 ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 10 ஆம் திகதிய 10,517 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு மூதவையினாலும் பிரதிநிதிகள் சபையினாலும் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தால் அங்கீகரிக்கப்பட்டு 1951 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 07 ம் திகதிய 10,560 ஆம் இலக்க வர்த்தமானியில அதுபற்றிய அறிவித்தல் பிரசுரிக்கப்பட்ட நியமத்துணை–விதிகள் 1 தொடக்கம் 37 வரையுள்ள பாகங்களையும்,

(ஆ) வீடமைப்பு, உள்ளூராட்சி அமைச்சரால் ஆக்கப்பட்டு 1963 ஆம் ஆண்டு ஆனி மாதம் 21 ஆம் திகதிய 13,679 ஆம் இலக்க வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட்டதும் மூதவையாலும் சனப் பிரதிநிதிகள் சபையாலும் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தால் அங்கீகரிக்கப்பட்டதென 1965 ஆம் ஆண்டு தை மாதம் 8 ஆம் திகதிய 14,287 ஆம் இலக்க வர்த்தமானியில் அறிவித்தல் கொடுக்கப்பட்டதுமான நியமத்துணை–விதிகளின் 38 ஆம் பாகத்தையும்.

(இ) உள்ளூராட்சி அமைச்சரால் ஆக்கப்பட்டு 1966 ஆம் ஆண்டு ஆடி மாதம் 8 ஆம் திகதிய 14,703 ஆம் இலக்க வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட்டு மூதவையாலும் சனப்பிரதிநிதிகள் சபையாலும் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தால் அங்கீகரிக்கப்பட்டதென 1969 ஆம் ஆண்டு தை மாதம் 3 ஆம் திகதிய 14,885 ஆம் இலக்க வர்த்தமானியில் அறிவித்தல் கொடுக்கப்பட்டதுமான நியமத்துணை–விதிகள் 39 ஆம், 40 ஆம், 41 ஆம் பாகங்களையும்,

(ஈ) 1953 ஆம் ஆண்டு ஏப்பிரல் 10 இன் 10,517 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அபாயகரமானவையும் அருவருப்பானவையுமான தொழில்கள் சார்பான நியமத் துணை–விதிகளின் XVIII ஆம் பாகத்தைத் திருத்துமுகமாக அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உளநாட்டலுவல்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு 1972 மாச்சு 10 இன் 15,001 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு தேசிய அரசுப் பேரவையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்டதென 1972 ஆம் ஒக்தோபர் 27 இன் 31 ஆம் இலக்க வர்த்தமானியில் அறிவித்தல் வெளியிடப்பட்டதுமான துணை–விதிகளையும்,

(உ) அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு 1972 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 03 ஆம் திகதிய 32 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு தேசிய அரசுப் பேரவையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்டதென 1973 யூன் 29 ஆம் திகதிய 66 ஆம் இலக்க வர்த்தமானியில் அறிவித்தல் வெளியிடப்பட்ட நியமத்துணை–விதிகளின 42 ஆம் பாகத்தையும் இத்தீர்மானம் வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதியிலிருந்து ஏற்றுக்கொள்வதென்று வேலணைக்கிராமச்சபை, உள்ளூரதிகாரத் தாபனங்கள் நியமத்துணை–விதிகள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயமாம் 261) 3 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் இத்தால் தீர்மானிக்கிறது.

க. சதாசிவம்,
தலைவர்,
வேலணைக்கிராமச்சபை.

கிராமச்சபை அலுவலகம்,
வேலணை, 1976.12.29.

12-45—31.12.76 ந் திகதிய வர்த்தமானி இல. 246

---

### அறிவித்தல்

கிராமச்சபைக் கட்டளைச் சட்டத்தின் (257 ம் அத்தியாயம்) 37, 38, 39 ம் பிரிவின்கீழ் கீழ்க்காணும் உபவிதியில் குறிப்பிட்ட ஏக்கர்வரி, லைசன்ஸ் கட்டணங்கள் ஆகியன 1976 ம் ஆண்டுமுதல் ஆரையம்பதி கிராமப் பிரதேச எல்லைக்குள் விதித்து அறவிடுவதற்குக் கிராமச்சபைக் கட்டளைச் சட்டம் 52 (1) ம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கிராமச்சபை விதி பகுதி 4 பிரிவு 7 (1) ன் கீழ் தீர்மானம் மூலம் தீர்மானிக்கப்படடுள்ள தெனபதை இத்தால் அறியத்தருகின்றேன்.

ஆ. பா. விஜயரத்தினம்
விசேட ஆணையாளர்,
ஆரையம்பதி கிராமப் பிரதேசம்.

ஆரையம்பதி கிராமப் பிரதேச அலுவலகம்,
ஆரையம்பதி, காத்தான்குடி.

#### உப விதி

கிராமச் சபைக் கட்டளைச் சட்டம் 37 ம் பிரிவின்கீழ் விதிக்கப்பட்ட நிலவரி.

| | | ரூ. ச. |
|---|---|---|
| (1) | நெல் அல்லது சேனைதவிர்ந்த நிரந்தரமாகவோ அல்லது கிராமமாகவோ செயயப்படும் பயிர்ச்செய்கை ஏக்கர் ஒன்றிற்கு .. .. .. | 2 0 |

கிராம சபைக் கட்டளைச்சட்டம் 39 ம் பிரிவின்கீழ் விதிக்கப்பட்ட வாகன அல்லது மிருகவரி.—

| | | |
|---|---|---|
| 1. | வண்டி, திருக்கல்வண்டி அல்லது ஜின்றிச்சா தவிர்ந்து ஏனையவண்டி ஒவ்வொன்றிற்கும் .. | 5 0 |
| | இரட்டைவண்டி அல்லது திருக்கல்வண்டி இவை போன்ற ஒவ்வொன்றிற்கும் .. .. | 4 0 |
| | ஒற்றைமாட்டுவண்டி ; கைவண்டி அல்லது திருக்கல் வண்டி ஒவவொன்றிற்கும் .. .. | 2 50 |

| | ரூ. | ச. |
|---|---|---|
| ஜின் ரிக்சா ஒவ்வொன்றிற்கும் .. .. | 2 | 50 |
| துவிச்சக்கர வண்டி ஒவ்வொன்றிற்கும் .. | 1 | 0 |
| ஒவ்வொரு யானைக்கும் .. .. | 10 | 0 |
| ஒவ்வொரு குதிரைக்கும் .. .. | 5 | 0 |
| ஒவ்வொரு கோவேறு கழுதைக்கும் .. | 2 | 50 |
| ஒவ்வொரு கழுதைக்கும் .. .. | 2 | 50 |

**கிராம சபைக் கட்டளைச்சட்டம் 38 ம் பிரிவின்கீழ் விதிக்கப்பட்ட லைசன்ஸ் வரி**

| நிரை 1 | நிரை 2 ரூபா | ச. |
|---|---|---|
| (1) உறையகம் ஒன்றை வைத்திருப்பதற்கு .. | 50 | 0 |
| (2) உண்டிச்சாலை அல்லது உணவுச்சாலை .. | 25 | 0 |
| (3) பானசாலை .. .. .. | 50 | 0 |
| (4) தேனீர் அல்லது கோப்பிக்கடை .. .. | 15 | 0 |
| (5) பாற்பண்ணை ஒன்றைவைத்திருப்பதற்கு பசு 2 க்கு மேற்பட்டு 5 க்கு மேற்படாமல் இருக்குமிடத்து .. | 10 | 0 |
| பசு 5 க்கு மேற்பட்டு 10 க்கு மேற்படாதிருக்குமிடத்து | 20 | 0 |
| பசு 10 க்கு மேற்பட்டு 25 க்கு மேற்படாமல் இருக்குமிடத்து .. .. .. | 30 | 0 |
| (6) உணவுப்பொருட்கள் விற்கும்கடை அல்லது இடம் ஒன்றைவைத்திருப்பதற்கு .. .. | 25 | 0 |
| (7) குளிர்ந்த இறைச்சி விற்பனைசெய்யும் கடை அல்லது இடம் ஒன்றை வைத்திருப்பதற்கு .. | 50 | 0 |
| (8) கோழி விற்பனைசெய்யும் கடை அல்லது இடம் ஒன்றை வைத்திருப்பதற்கு .. | 25 | 0 |
| *(9) மீன் விற்பனைசெய்யும் கடை அல்லது இடம் ஒன்றை வைத்திருப்பதற்கு .. | 25 | 0 |
| (10) பழங்கள் விற்பனைசெய்யும் கடை அல்லது இடமொன்றை வைத்திருப்பதற்கு .. | 15 | 0 |
| (11) காய்கறி விற்பனைசெய்யும் கடை அல்லது இடமொன்றை வைத்திருப்பதற்கு.. .. .. | 20 | 0 |
| (12) உயிருள்ள மிருகங்களை விற்பனைசெய்யும் கடை அல்லது இடமொன்றை வைத்திருப்பதற்கு .. .. | 25 | 0 |
| (13) பதனிட்ட மீன் அல்லது கருவாடடை சேகரித்துவைப்பதற்கு .. .. .. | 30 | 0 |
| (14) பசளை அல்லது செயற்கை உரத்தை உற்பத்தி செய்வதற்கு .. .. .. | 50 | 0 |
| (15) சவர்க்கார உற்பத்தி செய்வதற்கான இடம் .. | 50 | 0 |
| (16) தோல்பதனிடும் சாலை ஒன்றை வைத்திருப்பதற்கு .. | 50 | 0 |
| (17) பாக்குப் பதனிடுவதற்கான உத்தரவுச்சீட்டு .. | 25 | 0 |
| (18) தோல் சேகரித்துவைப்பதற்கான இடமொன்றிற்கு .. | 25 | 0 |
| (19) எலும்பு சேகரித்து வைப்பதற்கான இடமொன்றிற்கு .. | 25 | 0 |
| (20) மீனுக்குப் பனிக்கட்டி (ஐஸ்) இடுதேலுக்கு | 25 | 0 |
| (21) வெட்டுமரம் பதம்பண்ணுவதற்கு .. .. | 25 | 0 |
| (22) மூன்று மூடைகளுக்கு மேற்பட்ட செயற்கை உரத்தை சேகரித்துவைப்பதற்கு .. .. | 25 | 0 |
| (23) சோடா உற்பத்தி செய்வதற்கு .. .. | 100 | 0 |
| (24) புகையிலை பதப்படுத்துவதற்கு, உணர்த்துவதற்கு | 50 | 0 |
| (25) சுருட்டுகளை உற்பத்தி செய்வதற்கு .. | 50 | 0 |
| (26) கள் சேகரிக்கும் நிலையமொன்றிற்கு .. | 100 | 0 |
| (27) பீடிகள் உற்பத்திசெய்வதற்கு .. .. | 25 | 0 |
| (28) கொப்பரு உற்பத்தி செய்வதற்கு .. .. | 50 | 0 |
| (29) விற்பனைக்கு கொப்பரு சேகரித்து வைப்பதற்கு .. | 50 | 0 |
| (30) தேங்காய் எண்ணெய் உற்பத்தி செய்வதற்கு .. | 50 | 0 |
| (31) தும்பு உற்பத்திசெய்வதற்கு சேகரித்து வைப்பதற்கு .. | 50 | 0 |
| (32) வெட்டு மரக்காலையொன்றை வைத்திருப்பதற்கு .. | 100 | 0 |
| (33) ஆபரணங்கள் உற்பத்தி செய்வதற்கு .. | 50 | 0 |
| (34) கொல்லுலை ஒன்றை வைத்திருப்பதற்கு .. | 25 | 0 |
| (35) விற்பனைக்கு வைக்கோல் சேகரித்து வைப்பதற்கு .. | 25 | 0 |
| (36) அச்சகம் ஒன்றை வைத்திருப்பதற்கு .. | 50 | 0 |
| (37) பிராணவாய்வு உபயோகிக்கும் கொல்லுலை ஒன்றை வைத்திருப்பதற்கு .. .. .. | 50 | 0 |
| (38) 20 குதிரைச் சக்திக்கு மேற்படாத அரிசி ஆலை அல்லது இயந்திரம் ஒன்றை வைத்திருப்பதற்கு .. | 100 | 0 |
| (39) 20 குதிரைச்சக்திக்கு மேற்பட்ட அரிசி ஆலை அல்லது குத்தியந்திரம் ஒன்று வைத்திருப்பதற்கு .. | 150 | 0 |
| (40) இயந்திரத்தினுல் அல்லாது செங்கற்களை அல்லது ஓடுகளை உற்பத்தி செய்வதற்கு அல்லது சூளையிடுவதற்கு .. | 50 | 0 |
| (41) இயந்திரத்தினுல் செங்கற்களை அல்லது ஓடுகளை உற்பத்தி செய்வதற்கு அல்லது சூளையிடுவதற்கு .. | 250 | 0 |
| (42) பற்றறிகளை மின் ஏற்றுவதற்கு .. .. | 50 | 0 |
| (43) சுண்ணாம்பு சுடுதல் சேகரித்துவைத்தல் பதப்படுத்துதல் அல்லது தகர்த்தலுக்கான உத்தரவுச்சீட்டு .. | 50 | 0 |
| (44) தேங்காய்மட்டை ஊறப்போடும் காலை ஒன்றை வைத்திருப்பதற்கு .. .. .. | 25 | 0 |
| (45) கொண்டுதிரிந்து விற்பனைசெய்வதற்கான உத்தரவுச்சீட்டு .. .. .. | 10 | 0 |
| (46) சாணம் சேகரிப்பதற்கான உத்தரவுச் சீட்டு .. | 15 | 0 |
| (47) தனிப்பட்ட சந்தையை அல்லது முறைச்சந்தையை வைத்திருப்பதற்கான உத்தரவுச் சீட்டு .. .. | 250 | 0 |
| (48) மீனைப்பதப்படுத்துவதற்கு அல்லது காயவைப்பதற்கு .. | 25 | 0 |
| (49) மிளகாய் கோப்பி, கோதுமை தானியங்களை அரிசசற்கு அல்லது இடிப்பதற்கு .. .. | | |
| (அ) ஒரு இயந்திரம் பயன்படுத்துமிடத்து .. | 50 | 0 |
| (ஆ) ஒன்றுக்கு மேற்பட்ட இயந்திரம் பயன்படுத்துமிடத்து | 75 | 0 |
| (50) கையல் மரம் அல்லது மரப்பலகை அல்லது மட்டை அரியும் ஆலை ஒன்றை வைத்திருப்பதற்கு .. | 25 | 0 |
| (51) இயந்திர மரம் அரியும் ஆலை ஒன்றை வைத்திருப்பதற்கு .. .. | 100 | 0 |
| (52) மோட்டார் வாகனம் திருத்தும் நிலையமொன்றை வைத்திருப்பதற்கு .. .. | 50 | 0 |
| (53) துவிச்சக்கரவண்டிகள் பழுதுபார்க்கும் இடமொன்றை வைத்திருப்பதற்கு .. .. | 10 | 0 |
| (54) தளபாடக்கடை ஒன்றை வைத்திருப்பதற்கு .. | 50 | 0 |
| (55) விறகு சாலை ஒன்றை வைத்திருப்பதற்கு .. | 25 | 0 |
| (56) விறகு சேகரித்து வைப்பதற்கு .. | 15 | 0 |
| (57) ஓடுகளை அல்லது செங்கற்களை அல்லது சூளைக்கற்களைச் சேகரித்து வைப்பதற்கான ஒரு சாலையை அல்லது காலையை வைத்திருப்பதற்கு .. .. | 25 | 0 |
| (58) ஒரு மின்சார அல்லது வானொலிப்பெட்டி பழுதுபார்க்கும் கடையை வைத்திருப்பதற்கு .. | 50 | 0 |
| (59) சுண்ணாம்புச் சூளை ஒன்றை வைத்திருப்பதற்கு .. | 25 | 0 |
| (60) மிட்டாய் உற்பத்தி செய்வதற்கு .. | 25 | 0 |
| (61) நிறத்தை அல்லது வார்னிஸ் சேகரித்துவைப்பதற்கு .. | 25 | 0 |
| (62) வெற்றிலைக்கு சேகரித்து வைப்பதற்கு .. | 25 | 0 |
| (63) கரிக்குக் கட்டைகளை கருக்குவதற்கு .. .. | 25 | 0 |
| (64) கரிசேகரித்து வைப்பதற்கு .. .. | 15 | 0 |
| (65) சலவைக்கூடம் ஒன்றை வைத்திருப்பதற்கு .. | 15 | 0 |
| (66) சிகையலங்காரக் கடை ஒன்றை வைத்திருப்பதற்கு .. | 25 | 0 |
| (67) பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கடை ஒன்றை நடத்துவதற்கு .. .. | 100 | 0 |
| (68) இயந்திரத்தினுல் கல்லை அல்லது கருங்கல்லை நொருக்குவதற்கு .. .. | 100 | 0 |
| (69) புடைவைக்கடை ஒன்றை வைத்திருப்பதற்கு .. | 25 | 0 |
| (70) டயர் அல்லது டியூப்புகள் வல்கனைஸ் நிறுவனமொன்றைவைத்திருப்பதற்கு .. .. | 25 | 0 |
| (71) நூல் நூற்கும் சாலைக்கு தறி ஒன்றுக்கு விதிக்கும் .. | 5 | 0 |
| (72) மின் தறியினுல் புடைவை உற்பத்தி செய்வதற்கு .. | 150 | 0 |
| (73) தேர்களை அல்லது பாருக்களை நிர்மாணிக்கும் அல்லது பழுதுபார்க்கும் அல்லது வாடகைக்கு விடும் இடமொன்றை வைத்திருப்பதற்கு .. .. | 50 | 0 |
| (74) பசளை அல்லது செயற்கை உரத்தை உற்பத்திசெய்து விற்பனை செய்யும் இடமொன்றை வைத்திருப்பதற்கு | 50 | 0 |
| (75) எண்ணெய் ஆலை வைத்திருப்பதற்கு .. | 50 | 0 |
| (76) புடைவைகள் அச்சிட்டு, வர்ணமிட்டும் இடமொன்றை வைத்திருப்பதற்கு.. .. .. | 25 | 0 |
| (77) தகரவேலைக்கூடம் ஒன்றைவைத்திருப்பதற்கு | 15 | 0 |
| (78) தளபாடம் செய்யும் இடமொன்றை வைத்திருப்பதற்கு | 50 | 0 |
| (79) பனிக்கட்டி (ஐஸ்) தொழிற்சாலை வைத்திருப்பதற்கு | 75 | 0 |
| (80) இரும்புக்கடை ஒன்றை வைத்திருப்பதற்கு | 50 | 0 |
| (81) ஐஸ்கிறீம் உற்பத்திக்கான இடமொன்றை வைத்திருப்பதற்கு .. .. .. | 25 | 0 |
| (82) கையினுல் மெத்தை தைக்கும் இடமொன்றை வைத்திருப்பதற்கு .. .. .. | 25 | 0 |
| (83) பிரப்பம் பிரம்புப் பொருட்கள் உற்பத்திசெய்து சேகரித்து வைப்பதற்கு .. .. | 25 | 0 |
| | 25 | 0 |
| (84) மெதனேல் சேர் மதுசாரத்தை உற்பத்தி செய்வதற்கு அல்லது மெதனேல சேர் மதுசாரத்தைச் சேகரித்து வைப்பதற்கான உத்தரவுச்சீட்டு .. .. | 100 | 0 |
| (85) பழைய அல்லது புதிய உலோகங்களைச் சேகரித்துவைப்பதற்கான உத்தரவுச்சீட்டு .. .. | 25 | 0 |
| (86) 100 அந்தருக்கு மேற்பட்ட சீமெந்தைச் சேகரித்துவைப்பதற்கான உத்தரவுச் சீட்டு .. .. | 25 | 0 |

12-315—31.12.76 ந் திகதிய வர்த்தமானி இல. 246

வறக்காப்பொலைப் பட்டினசபை

பட்டினசபைகள் கட்டளை சட்டம்

1976 ஆம் ஆண்டுக்கான விசேட தண்ணீர் வரி

(256 ஆம் அத்தியாயமான) பட்டினசபைகள் கட்டளைச் சட்டத்தின் 129 (ஆ) என்னும் பிரிவின் மூலம் அவருக்கு கையளிக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு உள்ளூராட்சி ஆணையாளரினால் கொடுக்கப்பட்ட அங்கீகாரத்துடன் துணைவிதியினால் விதிக்கப்படக்கூடியவருடாந்த அத்தகைய வரையறைகளுக்கும் விலக்களிப்புகளுக்கும் அமைவாக இதனுடன் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவையும் தண்ணீர்ச் சேவையினால் பலனடைகின்றவையுமான நெல்வயல்கள் தரிசு நிலங்கள், திறந்த இடங்கள் நீங்கலான அசைவற்ற ஆதனங்களை அனைத்தினதும் வருடாந்தப் பெறுமதியின் நூற்றுக்கு மூன்று வீதமானதும் அத்தகைய வரிகள் முறையே மார்ச்சு 31, யூன் 30, செத்தெம்பர் 30, திசெம்பர் 31 ஆகிய நான்கு தவணைகளில் சமதொகைகளாகச் செலுத்தப்படற் பாலதுமான ஒரு விசேட தண்ணீர் வரியை சமதொகைகளாகச் செலுத்தப் படற்பாலதுமான ஒரு விசேட தண்ணீர்வரியை வறக்காப்பொலைப் பட்டினசபை விதித்துள்ளதென அறிவிக்கப்படுகின்றது.

டபிள்யு. ஈ. வீ. எஸ். த அல்விஸ்,
உள்ளூராட்சி ஆணையாளர்.

கொழும்பு,
1976.11.29.

அட்டவணை

பின்வரும் மதிப்பீட்டிலக்கங்கள் நீங்கலான வறக்காப்பொலைப்பட்டின சபைப் பிரதேசத்தின் முழுப்பிரதேசமும்

1 ம் வட்டாரம்—பிலந்துவ

அங்குருவெல்ல வீதி : 205/3, 205/5, 205/9, 205/10, 217/1, 58/1, 58/2, 58/3, 74/5, 74/6, 118/5, 118/7, 118/9, 118/10, 118/11, 184/1, 184/2, 184/3, 184/4, 198/5, 198/7, 268/3, 268/4, 268/8, 268/13, 268/14, 286/2, 286/5.

எத்நாவல வீதி : 3, 7, 9, 13, 15, 2, 4, 6, 8, 10, 10/1, 10/2, 10/4, 12, 14, 18.

மாதெனியா வீதி : 1, 3, 9, 11, 15, 19/1, 8.

கோவில் வீதி : 11/1, 11/3, 13, 13/1, 15/1, 15/2, 15/3, 15/5, 15/6, 15/8, 15/9, 15/10, 4, 6, 8, 12.

பிலந்துவ ஒழுங்கை : 15, 37, 39, 43, 14/2, 14/3, 14/4, 14/8, 14/10, 14/13, 14/14, 14/15, 14/16, 14/18, 14/19, 14/20, 14/21, 14/23, 14/24, 20/1, 22, 24, 36, 38, 38/1, 40, 42.

2 ம் வட்டாரம்—சம்மலதெனியா

கொழும்பு வீதி : 341/2, 144/3, 144/4, 144/5, 174/7, 174/10, 182/2, 192/1, 192/2, 192/5, 192/6, 192/7, 192/8, 192/9, 204/2, 204/6, 204/9, 146/2, 255/1, 275, 293, 114, 116, 87.

எத்நாவல வீதி : 9, 11, 17, 21, 31, 33, 37, 39, 49, 53, 55, 55/2, 55/3, 55/5, 55/6, 59, 63, 69, 6, 14, 44, 46, 48, 56.

சைத்தியாலை வீதி : 3, 7/1, 7/2, 7/4, 7/5, 9, 9/2, 15, 23, 27, 27/1, 31, 6, 10, 14, 16, 26, 26/1, 26/3, 26/4, 26/6, 26/7, 28, 38, 38/1, 44, 46.

மொணறிப்பிட்டிய வீதி : 11, 13, 15, 15/1, 15/2, 17, 19, 21, 23, 25, 27, 27/1, 29, 29/1, 31, 33, 41, 43, 43/2, 43/5, 18/2, 18/3, 18/4, 18/5, 18/6.

நியூகல வீதி : 3, 5, 7, 7/1, 9.

3 ம் வட்டாரம்—வரக்கப்பொல

மீரிகம வீதி : 25/1, 37, 49, 49/3, 51, 20/1, 32/1, 38/1, 78/2, 78/9, 78/10, 78/11, 78/15, 96/1, 96/2, 96/8, 96/9, 96/10, 96/11, 100/1, 100/2, 100/3, 100/3*a*, 100/5, 100/6, 100/11, 100/12, 116/1, 116/2.

முதனைம் ஒழுங்கை : 7, 11, 11/1, 11/4, 11/5, 11/7, 11/8, 17, 17/1, 17/2, 17/5, 17/6, 17/7, 17/10, 17/11, 2, 2/2, 2/3, 2/7, 2/13, 8, 10, 16.

கண்டி வீதி : 153/4, 165/2, 169/6, 169/7, 169/8, 189/1.

4 ம் வட்டாரம்—அம்பாபுஸ்ஸ

தேவாலய ஒழுங்கை : 5, 5/1, 7, 9, 9/1, 11, 11/2, 11/3, 11/4, 8, 10, 12, 14, 14/1, 16, 16/1, 4, 6.

கண்டி வீதி : 307/1, 359, 385.

அம்பேபுஸ்ஸ ஒழுங்கை : 4/1, 1, 3, 5, 11/2, 11/3, 11/4.

அலவ்வ வீதி : : 31.

5 ம் வட்டாரம்—மாகேன.

அலவ்வ வீதி : : 2/1, 40.

கண்டி வீதி : : 453, 455, 471/1, 471/2, 473/1, 489/1, 497/1, 497/2, 501/3, 501/5, 501/7, 501/9, 501/10, 501/11, 511/2, 531/1, 537/1, 537/2, 537/3, 553/1, 617/1.

12-333—31.12.76 ந் திகதிய வர்த்தமானி இல. 246

---

பனிக்கட்டிமுறிப்புக் கிராமாட்சி மன்றம்பன்குளம்

இறைச்சிக் கடைக்காரர் பற்றிய சட்ட அறிவித்தல்

இறைச்சிக் கடைக்காரர் பற்றிய கட்டளைச் சட்டம் அத்தியாயம் 272(7)ம் பிரிவின் தாற்பரியப்படி இதன்கீழ்க் காணப்படுபவரிடமிருந்து 1977 ம் ஆண்டுக்கு மாட்டிறைச்சிக் கடைக்கு அனுமதி தருமாறு விண்ணப்பம் கிடைத்துள்ளது.

இக் கிராமச் சபை இடப்பரப்பில் வசிப்போர் எவரேனும் அனுமதி கொடுப்பதை மறுக்க விரும்பினால் மறுப்புக்கான காரணங்களை வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து பதினான்கு தினங்களுக்குள் இணைப்பிரதியாக எமக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளுகின்றேன்.

| விண்ணப்பகாரரின் பெயர் | விலாசம் | இறைச்சிக்கடையின் தன்மை | வியாபாரம் நடைபெறுமிடம் |
|---|---|---|---|
| மஸ்தான் முகம்மது இவுறுாஹீம் .. | பிள்ளையார் கோயிலடி, பன்குளம் .. | மாட்டிறைச்சிக் கடை .. | பன்குளம் சந்தை வளவு |

சி. க. நடராசா,
தலைவர்
பனிக்கட்டிமுறிப்புக் கிராமாட்சி மன்றம்

கே. சதாசிவம்
அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்.

12-403/1—31.12.76 ந் திகதிய வர்த்தமானி இல. 246

---

பனிக்கட்டிமுறிப்புக் கிராமாட்சி மன்றம்–பன்குளம்

இறைச்சிக் கடைக்காரர் பற்றிய சட்ட அறிவித்தல்.

பனிக்கட்டிமுறிப்புக் கிராமப் பிரதேசத்திற்குள் புத்தளம் திருகோணமலைப் பகிரங்க வீதியில் 98½ மைல்கல்லிலிருந்து கம்பாங்கோட்டை சிங்கள அரசினர் பாடசாலை வரையிலும் நல்லகுட்டியாவில் 7 ம் கண்டத்தில் அமைந்துள்ள சிங்களப் பாடசாலையிலிருந்து முதலிக்குளம் கடை எல்லைவரையும் அடங்கியிருக்கும் சுற்றுவட்டாரப் பிரதேசம் எதிலும் சபையின் அனுமதி பெற்றவர்களைத் தவிர வேறு எவரும் எந்த விதமான இறைச்சி வகைகளையோ, மீன் வகைகளையோ அல்லது மரக்கறி வகைகளையோ சபையினால் அனுமதிக்கப்பட்ட இடம் தவிர்ந்த ஏனைய இடங்களில் வைத்தோ அல்லது கொண்டுதிரிந்தோ விற்பனை செய்வது 01.01.1977 ம் திகதியிலிருந்து முற்றாகத் தடைசெய்யப் பட்டுள்ளது.

எனினும் சபையின் அனுமதி பெற்று சபையின் சந்தை வளவில் விற்பனை செய்வதற்கு அனுமதியளிக்கப்படும். எனவே இதனைமீறிச் செயல்படுவோர் மீது சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படும் இந்த விதிமுறை அரசாங்க வர்த்தமானி பகுதி 4 இல் வெளியாகும் தினத்திலிருந்து அமுலிலிருக்கும்.

சி. க. நடராசா,
தலைவர்,
பனிக்கட்டிமுறிப்புக் கிராமாட்சி மன்றம்.

கே. சதாசிவம்.

அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்,
பனிக்கட்டிமுறிப்புக் கிராமாட்சி மன்றம்

12-403/2—31.12.76 ந் திகதியவர்த்தமானி இல. 246

### நிலாவெளி கிராமாட்சி மன்றம்

#### இறைச்சிக்காரர் பற்றிய சட்ட அறிவித்தல்

இறைச்சிக்காரர் பற்றிய 1947 ம் ஆண்டின் 44 ம் திருத்த சட்டத்தின் அத்தியாயம் 272 7ம் பிரிவின் தாற்பரியப்படி இதன் கீழ் காணப்படும் அட்டவணையில் காண்போரிடமிருந்து 1977 ம் ஆண்டுக்கு மாடு, ஆடு அடித்து இறைச்சி விற்பதற்கான உத்தரவுப்பத்திரம் தருமாறு விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன.

இக்கிராமாட்சி மன்ற எல்லைக்குள் வசிப்போர் எவரேனும் மேற்குறிப்பிட்ட உத்தரவுப்பத்திரம் கொடுப்பதை மறுக்க விரும்பின் மறுப்புக்கான காரணங்களை இவ் வர்த்தமானி பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் இணைப்பிரதிகளாக எமக்கு கிடைக்கும்படி அனுப்பிவைக்குமாறு இத்தால் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அட்டவணை

| இல. | விண்ணப்பக்காரர் பெயர் | விலாசம் | தொழில் | தொழில் செய்யும் இடம் |
|---|---|---|---|---|
| 1 | திரு. யு. எம். சம்சுதீன் | கோபாலபுரம், நிலாவெளி | மாட்டிறைச்சிக் கடை நடாத்தல் | வட் 1, 8ம் கட்டை சந்தி |
| 2 | திரு. எ. ஆர். எஸ். கமீத் | 73, யுனிட். 1, கந்தளாய் | மாட்டிறைச்சிக் கடை நடாத்தல் | வட் 3, கோபாலபுரம் |
| 3 | திரு. மு. க. இபுறுகிம் | 25, ஐமாலியா வீதி, திருகோணமலை | மாட்டிறைச்சிக் கடை நடாத்தல் | வட் 4, இறக்கக்கண்டி. |
| 4 | திரு. ஜெ. பக்கீர்தம்பி | வட், 1 நிலாவெளி | ஆட்டிறைச்சிக் கடை நடாத்தல் | வட்: 1.8 ம் கட்டை சந்தி |

நிலாவெளி கிராமாட்சி மன்றம்,
நிலாவெளி,
1976 ம் ஆண்டு கார்த்திகை மீ 29 ந் உ.

ஜனாப் ஜே. எம். சரிப் ஜே. பி.,
தலைவர், நிலாவெளி கிராமாட்சி மன்றம்.

12–352— 1.12.76 ந் திகதிய வர்த்தமானி இல. 246

---

### முல்லைத்தீவுச் சந்தை வரி விதிதங்கள் 1977

22.11.76 ம் திகதிய 15 (7( ம் சபைத்தீர்மானம்

| | ரூ. ச. |
|---|---|
| 1. சந்தைக்கு விற்பனைக்காக என்ன பொருள் கொண்டு சென்று ஆ ் கொண்டு செல்லும் ஒவ்வொரு கூடைக்கோ பெட்டிக்கோ கடகத்துக்கோ அல்லது எந்த ஒரு வதனத்திற்கும். கச்தைக்கட்டிடத்திலுள்ள 9. ச அடிக்குக் கூடாமலும் அல்லது கச்தைக்கட்டிடத் திலுள்ள எப்பாகத்தையும் உபயோகிப்பதற்கு நாளொன்றிற்கு | 1 25 |
| 2. சந்தைக் கட்டித்திலுள்ளிருந்து விற்பதற்கு இடமில்லாத போது குத்தகைக்காரரால் ஒதுக்கப்படும் சந்தைக்கடங்கியுள்ள வெற்று நிலத்தை நாளொன்றிற்குப் பாவிப்பதற்கு. | 1 25 |
| 3. சந்தை எல்லையுள் வியாபாரம் செய்யும் ஒவ்வொரு வாகனத்திற்கும் நாளொன்றிற்கு | 10 00 |

4. சந்தை எல்லையுள் கூறிவிற்கும் மீன் வகைகளுக்கு விற்கும் தொகையில் 10% வரி குத்தகைக்காரருக்குச் செலுத்தப்படல் வேண்டும்.

இக் கட்டணங்கள் சார்பாக 1975 ம் ஆண்டு மே மாதம் 9 ம் திகதி பகுதி IV–உள்ளூராட்சி இலங்கை குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் 170 ம் பக்கத்தில் வெளியான பிரசுரம் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது.

ம.சு. வஸ்தியாம்பிள்ளை,
தலைவர்,
பட்டினசபை, முல்லைத்தீவு.

பட்டினசபை அலுவலகம்,
முல்லைத்தீவு, 1.12.76.

12–367—31.12.76 ந் திகதிய வர்த்தமானி இல. 246

---

### முள்ளியவளை கிராமப்பிரதேசம்

#### இறைச்சிக்காரர் பற்றிய சட்ட அறிவித்தல்

இறைச்சிக்காரர் பற்றிய சட்டம் (அத்தியாயம் 272) 7 ம் பிரிவின்படி

இறைச்சிக்காரர் பற்றிய சட்டம் (அத்தியாயம் 272) 7ம் பிரிவின் தாற்பரியப்படி இதன் கீழ்க்காணும் அட்டவணையில் காண்பவர்களிடமிருந்து 1977 ம் ஆண்டுக்கு இறைச்சிக் கடைக்கு லைசென்ஸ் தரும்படி விண்ணப்பம் கிடைக்கப்பட்டிருக்கிறது.

இந்தக் கிராமப்பிரதேச எல்லைக்குள் வசிப்போர் எவரேனும் லைசென்ஸ் கொடுப்பதை மறுக்க விரும்பினால், மறுப்புக்கான காரணங்களை இந்த அறிவித்தல் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து பதினாலு நாட்களுக்கிடையில் இணைப்பிரதிகளாக எமக்கு அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

அட்டவணை

| விண்ணப்பக்காரரின் பெயர் | வியாபாரத்தன்மை | வியாபாரம் செய்யும் இடம் |
|---|---|---|
| ஜனாப் ஜே. எம். மக்கீன், | மாட்டிறைச்சிக்கடை | தண்ணீரூற்றுச் சந்தைக்கடை இல. 1 |
| ஜனாப் ஜே. எம். மக்கீன் | மாட்டிறைச்சிக்கடை | முள்ளியவளை சந்தைக்கடை இல. 4 |
| ஜனாப் எம். ஐ. ஜுனைட் | ஆட்டிறைச்சிக்கடை | தண்ணீரூற்றுச் சந்தைக் கடை இல. 3 |

விசேட ஆணையாளர் அலுவலகம்,
கிராமப்பிரதேசம்,
முள்ளியவளை,
1976 ம் ஆண்டு டிசெம்பர் மீ 10 ந் உ.

ப. பரம்சோதி,
விசேட ஆணையாளர்.

12–611—3 .12.76 ந் திகதிய வர்த்தமானி இல. 246

**1975 ம் வருடத்தில் 17 ம் இலக்க கழகங்களுக்கு உரிமம் வழங்கும் சட்டம்**

கீழ்க் குறிப்பிட்ட உப பட்டியலில் குறிப்பிட்டவரால் அவருடைய பெயருக்கு எதிராக குறிப்பிடப்படும் கழகம் கீழ் குறிப்பிடப்பட்ட இடத்தில் நடாத்துவதற்கான உரிமம் பெறும் பொருட்டு என்னிடம் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டிருப்பதை 1975 ம் வருடத்தின் 17 ம் இலக்க கழகங்களுக்கு உரிமம் வழங்கும் சட்டத்தின் 6 வது பிரிவின் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

இதன் கீழ் குறிப்பிடப்படும் கழகம் அமைக்கப்பட்ட அல்லது அமைக் கப்பட விருக்கும் இடத்தில் சுற்றுப்புறங்களில் குடியிருப்பவர்கள் எவரேனும் ஒருவர் அத்தகைய கழகத்திற்கு உரிமம் வழங்குவதையிட்டு எதிர்ப்பைத் தெரிவிக்க விரும்புபவர்கள் இவ்வறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து நான்கு கிழமைகளுக்குள் தமது எதிர்ப்பை, அத்தகைய எதிர்ப்புக்கான காரணங்களுடன் எழுத்து மூலம் இரண்டு பிரதிகளில் என்னிடம் சமர்ப்பிக்குமாறு வேண்டப் படுகிறார்கள்.

உப அட்டவணை.

போல் இருள்ணபிள்ளை மரியநாசன்—செயலாளர்,
நொதேன விளையாட்டுக்கழகம்,
358, 2/1, ஆஸ்பத்திரி வீதி.

ஏ. எ. யோசேப்,
விசேட ஆணையாளர்,
யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

மாநகராட்சிமன்ற அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
18.11.76.

12-661—3 .12.76 ந் திகதிய வர்த்தமானி இல. 246

---

**இறக்காமம் கிராம சபை**

இறைச்சிக்காரர் பற்றிய அறிவித்தல்

இறைச்சிக்காரர் பற்றிய கட்டளைச்சட்டம் (அத்தியாயம் 272) 7ம் பிரிவின் தாற்பரியப்படி இதன்கீழ் காணப்படும் அட்டவணையில் காண்பவர்களிடம் இருந்து 1977ம் ஆண்டுக்கு இறைச்சிக்கடைக்கு அனுமதிப்பத்திரம் தரும்படி விண்ணப்பம் கிடைத்துள்ளது.

இக்கிராம பிரதேச இடப்பரப்பில் வசிக்கும் எவரேனும் அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதை மறுக்க விரும்பின் மறுப்புக்கான காரணத்தை இந்த அறிவித்தல் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து பதினான்கு (14) நாட்களுக்குள் எனக்கு இரு பிரதிகளுடன் அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

அட்டவணை

| விண்ணப்பகாரரின் பெயர் | வியாபாரத்தின் தன்மை | வியாபாரம் செய்யும் இடம் |
|---|---|---|
| 1. எம். எஸ். ஜமாலதீன் | மாட்டிறைச்சி | இறக்காமம் |
| 2. எம். எஸ். தாஜுதீன் | மாட்டிறைச்சி | வரிபத்தான்சேனை |
| 3. எம். எஸ். ஜமால்தீன் | ஆட்டிறைச்சி | இறக்காமம் |

கிராமாட்சி மன்ற அலுவலகம்,
இறக்காமம்,
1976 ம் ஆண்டு நொவெம்பர் மீ 30 ந் உ.

எம். எச். ஹசன்,
விசேட ஆணையாளர்.

12—541—31.12.76 ந் திகதிய வர்த்தமானி இல. 246

---

**நிந்தவூர் கிராமாட்சி மன்றம்**

இறைச்சிக்காரர் பற்றிய சட்ட அறிவித்தல்

இறைச்சிக்காரர்பற்றிய 1947 ஆம் ஆண்டின் 44 ம் இலக்க சட்டத்தின் 7ம் பிரிவின் தாற்பரியப்படி கீழ்க்காணும் அட்டவணையில் பெயர் தரப்பட்ட வரிடமிருந்து 1977 ஆம் ஆண்டிக்கு இறைச்சிக்கடை வைத்து வியாபாரம் நடத்துவதற்கு கசாப்புக்காரர் அனுமதிப்பத்திரம் (புச்சர் லைசன்ஸ்) வழங்கும் படி விண்ணப்பம் கிடைத்துள்ளது.

ஆகவே இக்கிராமாட்சி மன்றத்தின் நிருவாக எல்லைக்குள் வாழ்கின்றவர்கள் எவரேனும் குறிக்கப்பட்ட இவ்வனுமதிப்பத்திரம் வழங்கலை மறுக்கவிரும்பினுல் அவர்கள் இவ்வர்த்தமானி அறிவித்தலிருந்து பதினைகு (14) நாட்களுக்குள் மறுப்பிற்கான காரணங்களை காட்டி எழுத்துமூலம் இருபிரதிகளில் எமக்கு அனுப்பிவைக்கும்படி இத்தால் அறிவித்துக் கொள்ளப்படுகிறது.

அட்டவணை

| பெயர் | விலாசம் | வட்டாரம் | வியாபாரம் செய்யுமிடம் |
|---|---|---|---|
| 1. அசனுர் ஆதம்வாவா | நிந்தவூர், 5 அட்டப்பள்ளம் | 1—8 வரை | நிந்தவூர் 3ம் குறிச்சி பிரதான மார்கட் |

விசேட ஆணையாளர் அலுவலகம்,
நிந்தவூர், கி.ச.
1976 ம் ஆண்டு டிசெம்பர் மீ 16 ந் உ.

எம். முகம்மதுஅலி,
விசேட ஆணையாளர், நிந்தவூர் கி.ச.
நிந்தவூர்.

12-729—31.12.76 ந் திகதிய வர்த்தமானி இல. 246

---

**மேல்பற்று கிழக்கு கிராம சபை**

இறைச்சிக் கடைக்காரர் பற்றிய கட்டளைச்சட்ட அறிவித்தல்

இறைச்சிக்கடைக்காரர் பற்றிய கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 272) பிரிவு 7ன் தாற்பரியப்படி இதன்கீழ்க் காணப்படும் அட்டவணையில் காண்பவரிட மிருந்து 1977 ம் ஆண்டுக்கு இறைச்சிக் கடை குத்தகைப் பத்திரம் தரும்படி விண்ணப்பம் கிடைத்திருக்கின்றது.

இக்கிராம சபையின் இடப்பரப்பில் வசிப்பவர் எவரேனும் உத்தரவுப்பத்திரம் கொடுப்பதை மறுக்க விரும்பினுல் காரணங்களை இவ்வர்த்த மானியில் பிரசுரிக்கப்பட்ட 14 நாட்களுக்குள் எமக்கு அனுப்பி வைக்கும்படி தயவாகக் கேட்டுக்கொள்கிறேன்.

| விண்ணப்பகாரரின் பெயரும் விலாசமும் | வியாபாரத்தின் தன்மை | இடம் |
|---|---|---|
| 1. இ. தனிகாசலம் 3ம் வட்டாரம், மாமடு, நெடுங்கேணி | ஆட்டிறைச்சி, மாட்டிறைச்சி கடை | நெடுங்கேணி |

மேல்பற்று கிழக்கு கிராம சபை அலுவலகம்,
நெடுங்கேணி,
1976 ம் ஆண்டு டிசெம்பர் மீ 16 ந் உ.

தலைவர்,
மேல்பற்றுக் கிழக்குக் கிராம சபை.

12—[illegible]—31.12.76 ம் திகதிய வர்த்தமானி இல. 246

## இறைச்சிக்காரர்பற்றிய அறிவித்தல்

இறைச்சிக்காரர் பற்றிய 1947 ம் ஆண்டின் 44ம் இலக்கத் திருத்தச் சட்டத்தின் 7ம் பிரிவின் தாற்பரியப்படி இதன்பின் குறிப்பிடும் அட்டவணையிற் காண்போரிடமிருந்து 1977 ம் வருடத்திற்கு ஆடு, மாடு, அறுத்து விற்பனை செய்வதற்கு புச்சர்ஸ் லைசென்ஸ் தரும்வண்ணம் விண்ணப்பம் கிடைத்துள்ளது. இக்கிராமசபையின் இடப்பரப்பில் வசிப்பவர் எவரேனும் "லைசென்ஸ்" கொடுப்பதை மறுக்க விரும்பின் மறுப்புக்கான காரணங்களை இவ் அறிவித்தல் இவ் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் இணைப்பிரதிகளில் எனக்கு அனுப்பிவைக்கும் வண்ணம் இத்தால் வேண்டப் படுகின்றது.

அட்டவணை

| விண்ணப்பக்காரர் பெயர் | விலாசம் | செய்யும் வியாபாரம் | வியாபாரம் செய்யுமிடம் |
|---|---|---|---|
| பி. ஏ. றகுமான் | .. 3ம், வட்டாரம் குச்சவெளி | .. ஆட்டிறைச்சி, மாட்டிறைச்சி | .. குச்சவெளி மாக்கெற் |

கு. கண்ணுச்சாமி,
தலைவர்,
கிராமாட்சிமன்றம் குச்சவெளி.

கிராமாட்சிமன்றம்,
குச்சவெளி,
1976 ம் ஆண்டு நொவெம்பர் மீ 30 ந் உ.

12—806—31.12.76 ந் திகதிய வர்த்தமானி இல. 246

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது